வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

சஞ்சீவி

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 78

ஞாயிற்றுக்கிழமை 12 பெப்ரவரி 2023

தை 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

பக்கங்கள் 16+8

# யாழ்ப்பாண நகரில் பொலிஸார் அராஜகம்!!!

## போராடியோர் மீது தடியடி; ஆடைகள் கிழிப்பு

## 18 பேர் கைதாகிப் பிணையில் விடுதலை

## தடுத்துவைக்கப்பட்டோர் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை



யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற சுதந்திரநாள் கொண்டாட்ட நிகழ்வுக்கு எதிராக யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை பொலிஸார் தடியடி நடத்தி மூர்க்கமாக ஒடுக்கினர். போராட்டத்தில் ஈடுபட்ட 18 பேரை பொலிஸார் குண்டுக்கட்டாகத் தூக்கி கைது செய்தனர். »15

## ரணிலுக்கு எதிராக மும்முனைத்தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திர நாள் கொண்டாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மும்முனைத்தாக்குதல் முன்னெடுக் »15

## 'ராகு காலத்தில்' உரித்தாக்கப்பட்டது யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 12

இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாண மக்களுக்காக அமைக்கப்பட்ட 'யாழ்ப்பாண கலாசார நிலையம்' நேற்று முற்பகல் 10.03க்கு, கல்வெட்டு திரை நீக்கம் செய்யப்பட்டு யாழ்ப்பாண மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது. »15

## பிரதமர் வரவில்லை

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் நேற்று இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதமர் »15

## சுதந்திரநாள் கொண்டாட்டங்கள் தமிழ்க் கட்சிகள் புறக்கணிப்பு

### அங்கஜனும் பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், பெப். 12

இலங்கையின் சுதந்திரநாள் கொண்டாட்ட நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பங்கேற்கவில்லை. அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் »13

## இந்தியத் தலையீடு; ஆர்னோல்ட் பங்கேற்பு

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாண கலாசார மண்டபத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் யாழ். »15

## ரணிலைக் கடுப்பாக்கிய அமைச்சர்!

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற நிகழ்வில், அமைச்சர் ஒருவர் அழையா விருந்தாளியாகக் கலந்துகொண்டதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிருப்தியடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. »13

## ரணிலை தனித்து சந்தித்தார் விக்கி

### சாதகமான பதில்களை அவர் வழங்கினாராம்

யாழ்., பெப். 12

ஜனாதிபதிக்கு எதிராக யாழ். நகரில் »13

## இலங்கையின் சுதந்திரத்துக்கு பங்களித்தவர்கள் தமிழர்களே

சிங்களத் தலைமைத்துவத்தின் முன்னோடி ஆறுமுகநாவலர்

'சரஸ்வதி மஹால்' என கலாசார நிலையத்தைப் பெயரிடுங்கள்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

விரிவு: - பக்.14



கலாசார நிலைய உரித்தாக்கல் நிகழ்வில் இந்திய இணை அமைச்சருக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

## இந்தியாவை அரவணைத்து இலங்கை பயணிக்கும்

### இணை அமைச்சர் முருகன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், பெப். 12

அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் இலங்கை, இந்தியாவை அரவணைத்துச் செல்லும் என நான் நம்புகின்றேன் என்று இந்திய மத்திய இணை அமைச்சர் கலாநிதி எல். முருகன் »14






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13க்கு எது தடை என்று ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் ரணில்!

## பொதுஜன பெரமுன கூறுகின்றது



கொழும்பு, பெப்.12

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை காலமும் தடையாக இருந்த காரணி, தற்போதும் உள்ளதா என்பதைப் புலனாய்வு அமைப்புகள் ஊடாக ஜனாதிபதி ஆராயவேண்டும். அவ்வாறு இருந்தால் 13ஆம் திருத்தத்தில் கைவைப்பதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த நல்லாட்சியில் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக பதவி வகித்தார். அப்போது கூட 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முற்படவில்லை. ஆகவே, '13' ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் நிச்சயம் இருக்கக்கூடும். அது தொடர்பாக ஜனாதிபதி தேடிப்பார்க்கவேண்டும். தடையாக உள்ள காரணி தற்போதும் அப்படியே உள்ளது என புலனாய்வு அமைப்புகள்கூறினால், இந்த முயற்சியை ஜனாதிபதி கைவிடவேண்டும். சமஷ்டிக் கட்டமைப்பிலான தீர்வை சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஒருபோதும் ஆதரிக்காது - என்றார். (எ-14)

## கட்சியின் செயலாளர்களுடன் சந்திப்பு

கொழும்பு, பெப்.12

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையே முக்கியமான சந்திப்பொன்று எதிர்வரும் 14 ஆம் திகதி காலை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பாக ஆராய்வதற்கே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, திட்டமிட்ட அடிப்படையில் மார்ச் 9 ஆம் திகதி தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டிலேயே ஆணைக்குழு உள்ளது. மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் நேற்றுச் சனிக்கிழமை கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது. (எ-44)

## கற்பிட்டிக் கடற்கரையில் ஒதுங்கிய திமிங்கலங்கள்



கொழும்பு, பெப்.12

புத்தளம், கற்பிட்டி கண்டகுழி பகுதியில் நேற்று அதிகாலை திடீரென சுமார் 12 திமிங்கலங்கள் உயிருடன் கரையொதுங்கியுள்ளன. அவற்றில் மூன்று திமிங்கலங்கள் பின்னர் உயிரிழந்தன என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரையொதுங்கிய திமிங்கலங்களைக் கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கற்பிட்டி விஜய கடற்படையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து கடும் பிரியத்தனத்துக்கு மத்தியில் கடலுக்குள் மீண்டும் அனுப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். திமிங்கலங்களை கயிற்றால் கட்டி இயந்திரப்படகு மூலம் இழுத்துச் சென்று கடலின் ஆழமான பகுதியில் விடுவித்தனர்.

உயிரிழந்த 3 திமிங்கலங்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-இ)



## பலாலி விமான நிலையத்தில் தீர்வையற்ற விற்பனையகம்!

யாழ்ப்பாணம், பெப்.12

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் தீர்வையற்ற விற்பனை நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது. சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி பயணி ஒருவருடன் இணைந்து விற்பனை நிலையத்தைத் திறந்தார்.

சென்னை - பலாலி இடையிலான விமான சேவை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது என்று தெரிவித்த மேஜர் ஜெனரல் சந்திரசிறி, பலாலி விமானத்தின் ஊடாகப் பயணிக்கும் பயணிகளுக்காக மேலும் பல வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பலாலி மற்றும் இரத்மலானை இடையிலான உள்ளூர் விமான சேவையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவித்த அவர், வர்த்தக ரீதியில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடபிராந்திய சுங்கத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் யாழ்ப்பாண பலாலி விமான நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(எ-26,20)

## துருக்கிக்கு தேயிலை நன்கொடை

கொழும்பு, பெப்.12

பூகம்பத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள துருக்கி மக்களுக்கு உதவும் நோக்கில் உள்நாட்டு தேயிலை ஏற்றுமதியாளர்களின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கம் தேயிலையை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடை வெளிவிவகார அமைச்சின் அவசர உதவிப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஓ.எல். அமீர் அஜ்வத்தால் இலங்கைக்கான துருக்கி நாட்டுத் தூதுவர் டெமெற் செகெர்ஸியோக்லுவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

துருக்கி மக்களுக்கான இந்த உதவி வழங்கலானது பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பிய பிராந்திய பணிப்பாளர் ப்ரியங்கிகா தர்மசேன, இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் மற்றும் இலங்கை தேயிலைசபையின் மேம்பாட்டுப்பிரிவு பணிப்பாளர் பவித்ரி பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-இ)

## சுதந்திரதின நிகழ்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படாத நிலையிலும், பொருளாதார பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையிலும் இரண்டாவது தடவையாக சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் தேவையில்லை என்று தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. (எ-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# 'பசுமையை உருவாக்குவோம்' பண்ணையில் மரநடுகை

யாழ்ப்பாணம், பெப். 12

'இயற்கை வளத்தை மேம்படுத்துவோம் பசுமையை உருவாக்குவோம்' எனும் கருப்பொருளில் யாழ். பண்ணைக் கடற்கரைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், யாழ்.மாநகரசபை ஆகியவை இணைந்து இந்த மரநடுகைத் திட்டத்தை முன்னெடுக்கின்றன. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடுகை செய்தார்.

நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் மற்றும் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பதவிநிலை அதிகாரிகள் எனப்பலரும் பங்கேற்றனர்.

(ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலி

12.02.2023

தோற்றம் 25 . 07 . 1935



மறைவு 13 . 01 . 2023

அமரர் பர்னாந்து யோசேப் அன்ரனி

( ஓய்வுபெற்ற அதிபர், சட்டத்தரணி, பதில்நீதவான், பிரசித்த நொத்தாரிஸ் (JPUM) (அன்ரனி மாஸ்ரர்)

அப்பா என்றால் தெய்வம்தான் - எமக்கு
அதனால் தான் தெய்வமானீரோ - இன்று
துணைவனை இழந்த அம்மாவும்
துணையின்றி தவிக்கின்றாரே

தந்தையை இழந்து தவிக்கின்றோம் நாமும்
தாத்தாவை மறக்காது தாத்தா என பேரப்பிள்ளைகளும்
கூப்பிடுகின்றார்கள்
எங்குதான் சென்றீர்கள் எங்கள் அப்பாவே!
மாமாவை இழந்து மருமக்கள் வாட

மலை போன்ற பிரச்சினைகளை
மகத்தாகத் தீர்த்து மாண்புடனே வாழ்ந்தீர்களே
கண்களில் வெறுமை தெரிகின்றது
கண்ணீரில் கூட உங்கள்
முகம்தான் தெரிகின்றதுவே!

நினைக்க முடியவில்லை நீங்கள் இல்லையென
நீதிபதியாய் கூறிட்ட தீர்ப்புகள் ஏராளம்
நீங்கள் தான் எங்கு சென்றீர்கள்?
கல் மனதுடன் தானே காலமும் நகருகின்றது

ஆசையாய் பேசி அன்புடனே புத்தியும் கூறி
ஆறுதல் அளித்திட்ட - எங்கள் அப்பாவே
எங்கு சென்றீர்கள் - இனி
எங்கு உங்களைப் பார்ப்போம்
ஆறுமா எங்கள் மனங்கள் - கூறுங்கள்
அப்பா...... அப்பா......

இல.44, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்... குடும்பத்தினர்.


# ரெமிடியஸ் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

விபத்தில் சிக்கிப் படுகாய மடைந்து சிகிச்சை பெற்றுவந்த, யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பியின் மாநகரசபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான முடியப்பு ரெமிடியஸ் நேற்று உயிரிழந் துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி பருத்தித் துறை வீதியில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பா ணம் மாநகரசபையின் உறுப் பினரும், சட்டத்தரணியுமான ரெமிடியஸ் தலையில் படுகாய மடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் வீதியின் குறுக்கே சென்ற நாயுடன் மோதுண்டு விபத் துக்குள்ளாகியிருந்தார். விபத் தின்போது அவரது தலைக்க வசம் கழன்றதால் தலையில் படுகாயம் ஏற்பட்டது என்று தெரி விக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் இருந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனைக்கு அனுப்பியிருந் தனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந் தன.

மூளையில் ஏற்பட்ட கடுமை யான சிதைவு மற்றும் குருதிக் கசிவுகள் மூளையின் செயற் பாடுகள் கடுமையாகப் பாதித் ததன் விளைவாக நேற்று மு.ப.10.45 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.



(அ-ஔ.17,27,26)

யாழ்ப்பாணம் கலாசார மண்டபம்

# இந்திய அரசின் நடவடிக்கை தமிழர்களுக்கு ஏமாற்றமே!

## இந்து சமயப் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 12

இந்திய அரசால் 100 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட கலாசார மண்டபத்தை இலங்கை அரசிடம் கையளிப்பது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இந்துக்களுக்கு பெரும் சினத்தை ஏற்படுத்தி விட்டது - இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கை யில் மேலும் உள்ளதாவது:-

இந்தியா இந்தக் கையளிப்பை தாம் ராஜதந்திர ரீதியில் மேற் கொண்டதாக மனநிறைவும் கொள்ளலாம். இது தம்மைத் தாமே ஏமாற்றும் ஒரு நடவடிக் கையாகவே இலங்கை வாழ் இந் துக்கள் உறுதிபட நம்புகிறார்கள். 1987இல் மேற்கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்த இந்திய அரசுக்குத் தண்ணி காட்டும் இலங்கை அரசை மீண் டும் மீண்டும் நம்பும் இந்திய அரசின் மெத்தனப் போக்கை வர்ணிக்க இலங்கை வாழ் இந் துக்களிடம் வார்த்தைகள் ஏதும் இல்லாதிருக்கிறது. இந்தநிலை பாரதிய ஜனதா ஆட்சியில் ஏற்பட் டிருப்பதே 21ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அதிசயமாக அமைந் துவிட்டது. இங்கு நடைபெறும் இந்து மதத்துக்கு எதிரான நட வடிக்கைகள் பற்றி நாங்கள் இந்திய அரசிடம் முறையிடுவது வீண்செயலோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்தியத் திருநாடு இலங்கைத் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டின் கலாசார மண்ட பத்தை உடனடியாக மீளப்பெற்று இனப்பிரச்சினை தீர்ந்தபின் அதி கார அமைப்பிடம் கையளிக்க வேண்டும். - என்றார். (ம)

# அத்துமீறிப் பயணிக்கும் கனரக வாகனங்கள்!

## வன்னேரிக்குளம் விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி, பெப்.12

தடைகளை மீறி ஆடைத்தொழிற்சாலைப் பேருந்துகள் வயல் வெளி வீதிகளைப் பயன்படுத்தி வருவதால் வீதிகள் சதுப்பு நிலமாக மாறுவதுடன் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது என வன்னேரிக்குளம் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னேரிக்குளம் முருகன் கோயிலிலிருந்து ஜெயபுரம் வரை யான வீதிப் புனரமைப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இத னால் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் விவசாயிகளுக் கென நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்ட சிறிய மதகுகளைக் கொண்ட வீதி வழியாக கனரக வாகனங் கள் பயணிக்கின்றன. அதனையடுத்து அவ்வழியூடாக பஸ் கள், டிப்பர்கள் உள்ளிட்ட கனரக வாகனங்கள் செல்வதற்கு வன்னேரிக்குளம் கமக்கார அமைப்பின் முயற்சியால் தடை விதிக்கப்பட்டது. ஆயினும் தடைகளை மீறி ஆடைத்தொழிற் சாலைப் பேருந்துகள் தமது வழித்தட வீதியை விட்டு குறித்த வயல்வெளி வீதிகளைப் பயன்படுத்தி வருகின்றன.

இதனால் விவசாயிகள் குறித்த வீதியைப் பயன்படுத்த முடி யாத அளவுக்கு வீதி சின்னாபின்னமாகியுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து கனரக வாகனங்களின் அத்துமீறலை கட்டுப்படுத்த வேண்டும் - என்றனர். (ச-13)



# வீடு கையளிப்பு

மன்னார் பட்டித்தோட்டத்தைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற குடும் பம் ஒன்றுக்கு வன்னி ஹோப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் புதிய வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வர்ணகுலசிங்கம் மற்றும் அவரது பேரப்பிள்ளைகளான மருத்துவர் பிரனீதா பிரேம்ஜித் குடும்பத்தின் நிதி அனுசரணையில் இந்த வீடு கட் டிக்கொடுக்கப்பட்டது. நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங் கைக்கான பணிப்பாளர் என்.முரளிதரன், யாழ்ப்பாண மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

# தோட்டத்தில் கஞ்சா நபரொருவர் கைது!

தோட்டமொன்றில் கஞ்சாச் செடிகளை வளர்த்து வந்தவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட் டுள்ளார். இந்தக் கைது நடவ டிக்கை புத்தளம் கிவுல பகுதி யில் நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை இடம்பெற்றது.

சட்டவிரோதமாகக் கஞ்சாச் செடிகள் வளர்க்கப்பட்டு வரு வதாக கிடைக்கப்பெற்ற இரகசி யத் தகவலுக்கமைய புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாச் செடி களுடன் சந்தேகநபர் சட்டநட வடிக்கைகளுக்காகப் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைக்கப்பட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை 13 மூலம் தீர்க்கப்படவேண்டும்

## அமைச்சர் நஷீர் அஹமட் வலியுறுத்து



கொழும்பு, பெப். 12

அரசமைப்பின் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வடக்கு – கிழக்கில் முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினை உட்பட அனைத்து இன மக்களின் உரிமைப் பிரச்சினைகளும் அதன் மூலம் தீர்க்கப்பட வேண்டும் இவ்வாறு அமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒன்பது மாத குறுகிய காலகட்டத்தில் நாட்டில் குறிப்பிட்டளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டவேண்டும். எரிபொருள் நெருக்கடி, எரிவாயு நெருக்கடி, அத்தியாவசியப் பொருள்களுக்கான வரிசையுகம் மற்றும் நாடாளுமன்றத்துக்குக் கூட வருகைதர முடியாத நிலையை மாற்றியமைத்துள்ள பெருமை ஜனாதிபதியையே சாரும்.

பல்வேறு நெருக்கடி நிலையிலிருந்து நாடு மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உறுதியாகியுள்ளது.

அதனையடுத்து சர்வதேசநாடுகள் இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் நம்பிக்கையை உறுதிப்படுத்தும். பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டில் இந்தளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதை சாதாரணமாகக் குறிப்பிட்டுவிட முடியாது எவராலும் பொறுப்பேற்க முடியாது என்ற நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று இந்தளவு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளார் என்பது பெருமைக்குரியதே.

அதேவேளை அண்மையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்ட பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் நாட்டின் எதிர்காலத் திட்டங்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பது தொடர்பில் பேச்சுக்களில் ஈடுபட்டதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் பான் கீ-மூனுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் நாட்டில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகள் தொடர்பில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம)

# சமஷ்டி வழங்க அனுமதிக்கோம்

## இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவிப்பு

சமஷ்டிக் கட்டமைப்பிலான அரசியல் தீர்வை வழங்குவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஒற்றையாட்சிக்குள்தான் அதிகாரப்பகிர்வு எனவும், நாட்டைப் பிளவுபடுத்த இடமளிக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இது புரியாமல் சிலர் போராட்டம் நடத்துகின்றனர். அதேவேளை, தமிழ் அரசியல் தலைவர்களும் சமஷ்டியில் தொங்கிக்கொண்டு இருக்கக்கூடாது. அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்ற உண்மையான எண்ணம் அவர்களுக்கு இல்லை.

ஏனெனில் தீர்வைக் கண்டுவிட்டால் அவர்களால் அரசியல் நடத்தமுடியாது. எது எப்படி இருந்தாலும் சமஷ்டிக் கட்டமைப்பிலான தீர்வுக்கு ஒருபோதும் இடமில்லை - என்றார். (ம-44)

# சமஷ்டியிலிருந்து நாம் விலகோம்!

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

அதிகாரப்பகிர்வு என்ற போர்வையில் மாயாஜாலவித்தை காட்டி எம்மை ஏமாற்ற முடியாது. எமது மக்கள் கோருகின்ற சமஷ்டித் தீர்வுதான் எமது நிலைப்பாடு. அதிலிருந்து நாம் ஒருபோதும் விலகமாட்டோம் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தல் தெற்கில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தப் போவதாக எதிர்பார்க்கப்படுகிறது. மக்களுடைய தீர்ப்பு அவர்கள் அளிக்கும் வாக்குச் சீட்டில்தான் இருக்கிறது. தெற்கிலே எவ்வாறான மாற்றம் ஏற்பட்டாலும் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்களின் நிலைப்பாடான தம்மைத் தாமே ஆள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து சிறிதும் விலகவில்லை. தொடர்ச்சியாக தமிழ் மக்கள் அதே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதை இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெளிப்படுத்தவேண்டும். அதிகாரப் பகிர்வு என்ற போர்வையில் மாயாஜால வித்தை காட்டி எம்மை ஏமாற்றமுடியாது. எமது மக்கள் கோருகின்ற சமஷ்டித் தீர்வினைத்தான் நாங்கள் எமது நிலைப்பாடாகக் கொண்டிருக்கின்றோம். அதிலிருந்து நாம் ஒரு போதும் விலகமாட்டோம் - என்றார். (ம)

# முதலீடுகளைச் செய்ய உத்தரவாதம் வழங்குக

## ஜப்பான் வலியுறுத்து

கொழும்பு, பெப்.12

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஜப்பானிய நிறுவனங்களுக்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்க வருகைதந்த ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தகே சுன்சுகேவுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையேயான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஜப்பான் உதவுவதற்கு - பங்களிப்பதற்குத் தயாராக உள்ளது. ஜப்பானிய உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இலகு ரயில் திட்டம் ஒரு தலைப்பட்சமாக இலங்கை அரசாங்கத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஜப்பானிய நிறுவனங்களின் நம்பிக்கையை முதலில் இலங்கை பெறவேண்டும். எமது திட்டங்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-6)

# பௌத்தத்தை உலகமயப்படுத்த பாடுபடுவாராம் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, பெப். 12

தேரவாத பௌத்தத்தை உலகமயப்படுத்துவதற்கு என்னாலான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்பேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

'சிங்கள தம்மசக்கனிகரண' என்ற நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேரவாதத்தை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச்சொல்வதற்கும் உலகமயப்படுத்துவதற்கும் அரசின் முழு ஒத்துழைப்பும் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

# மொனராகலையில் மீண்டும் நிலநடுக்கம்

மொனராகலை - வெல்லவாய, புத்தலப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை மீண்டும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. குறித்த நிலநடுக்கம் 2.3 ரிச்டர் அளவில் உணரப்பட்டதாகப் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவிக்கிறது. இந்த நிலநடுக்கத்தால் பொதுமக்களுக்கு எந்தவித உயிர்சேதமோ, பொருள்சேதமோ ஏற்படவில்லை. பொதுமக்கள் தேவையற்ற வகையில் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ம)

# துணைவேந்தர் விண்ணப்பங்கள் மறு அறிவித்தல்வரை நிறுத்தம்

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தெரிவு முறையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்பதால் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதை மறுஅறிவித்தல் வரை நிறுத்தி வைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்களை அறிவுறுத்தியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பதவி நியமனத்துக்காக நடைமுறையில் இருக்கும் சுற்றுநிருபம் மீளாய்வு செய்யப்பட்டு, புதிய நடைமுறைகள் விரைவில் அறிவிக்கப்பட இருப்பதனால், துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் ஆரம்பிக்கவேண்டாம் எனவும், புதிய நடைமுறைகள் கொண்ட சுற்றுநிருபம் வெளிவந்த பின்னர் அதன் அடிப்படையில் விண்ணப்பங்களைக் கோருமாறும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதற்கு 2020ஆம் ஆண்டு வரை, அந்தந்தப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களின் வாக்களிப்பு முறை மூலம் முன்மொழியப்படும் மூவரில் ஒருவரை பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தின்படி ஜனாதிபதி தெரிவுசெய்வார்.

அதன் பின் 2020ஆம் ஆண்டு வெளிவந்த தற்போது வரை நடைமுறையில் இருந்துவந்த சுற்றுநிருபத்தின்படி, துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களின் திறமை அடிப்படையில் முதல் ஐந்து பேரை தகுதி வாய்ந்த துறைசார் நிபுணர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழு தெரிவுசெய்து பேரவைக்குப் பரிந்துரை செய்யும். அந்த ஐவரில், புள்ளி வழங்கப்பட்டு முன்னிலைபெறும் மூவரின் பெயர்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்படும். மூவரில் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார். இந்த நடைமுறைகளின் படி, பதவியில் இருக்கும் துணைவேந்தர் ஒருவரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களைப் பகிரங்கமாகக் கோருதல் வேண்டும். இதன் அடிப்படையில், யாழ்ப்பாணம் மற்றும் களனி பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் தமது பதவிக் காலத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவு செய்ய இருப்பதனால் பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிக்குகளுடைய அரசியல் நிலைப்பாடு கொலை செய்யும் தீயுடன் விளையாடும்

## அருட்தந்தை மா.சக்திவேல் காட்டம்



வவுனியா, பெப். 12

**பிக்குகள் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை தீயிட்டு எரிக்கவில்லை, அவர்கள் எரித்தது பௌத்தத்தை. பிக்குகளின் அரசியல், கொலையும் செய்யும், தீயுடனும் விளையாடும். இதுதான் இப்போது மெய்ப்பட்டிருக்கின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல்.**

13ஆவது திருத்தம் பிக்குகளால் எரிக்கப்பட்டமை தொடர்பில் அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

பிக்குகள் பேரணி நடத்தி அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை வீதியில் எரித்திருக்கின்றார்கள். அவர்கள் எரித்தது பௌத்தத்தையே. பிக்குகளின் அரசியலுக்குப் பின்னால் உள்ள அரசியல் சக்தியே அதற்குக் காரணமாகும். ராஜீவ் காந்தி-ஜே.ஆர் ஒப்பந்தத்தை 36 வருடங்களுக்கு முன்னரே தமிழர்கள் தமது அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை.

13ஆம் திருத்தத்தோடு உருவான மாகாணசபையை தீர்வாக முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும் எவரும் ஆயத்தம் இல்லை. கொழும்பு அரசியல்வாதியான மனோ கணேசன் மட்டுமே இது அரசியல் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளி என கூறிக்கொண்டிருக்கின்றார்.

இத்தகைய சூழ்நிலையில் ரணில் 13 என்று கூறுவதும், பிக்குகள் அதனை பேரணியாக வந்து எரிப்பதும் அரசியல் நாடகமே அன்றி வேறில்லை. சீன சார்பு குழுவினரின் ஆதரவோடும், இந்திய மற்றும் மேற்குலகு சார்பு ஆதரவோடுமே ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் நிலையில் பூனைக்கு வாலும், எலிக்குத் தலையும் காட்டுகின்ற பாம்பின் செயற்பாடு இந்த அரசமைப்பு எரிக்கப்பட்டமைக்குப் பின்னால் இருக்கின்றது.

இந்தியாவையும், தமிழர்களையும் சமாளிப்பதற்கு 13 என்றும், சீனாவை தம்வசம் வைத்திருக்க பிக்குகள் பேரணியும் ஒருங்கே கையாளப்படுகிறது. தமிழர்கள் ஏமாந்து விடக் கூடாது. ஆனால், சில தமிழ் அரசியல்வாதிகள் இதற்குப் பின்னால் நிற்பது அரசியல் சுயஇலாபம் கருதியே. இத்தகைய சூழலில் ரணில் ஜனாதிபதி தேர்தலை நோக்கி காய் நகர்த்துவதையும் உணரக்கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி 'நான் நாட்டை பிரிக்கமாட்டேன், சமஷ்டி இல்லை. ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு' எனக் கூறுவதை நாம் அவதானிக்கலாம். சிங்கள - பௌத்த வாக்குகளின் சொந்தக்காரர்கள் பக்கமாக நின்று அரசியல் செய்யும் தலைமையின் கீழ் தமிழர்களுக்கு எதிர்காலம் இல்லை. இந்தப் பின்னணியில் சிங்கள - பௌத்த வாக்குகளின் உரிமையாளர்கள் பேரணியை கொழும்பு நோக்கி நகர்த்தி உள்ளனர்.

தமிழர்கள் பௌத்தத்தை மதிக்கின்றார்கள். 'அனைத்து உயிர்களும் துக்கமற்று இருப்பதாக, அனைத்து உயிர்களும் நலமாய் இருப்பதாக, அனைத்து உயிர்களும் நோயற்று இருப்பதாக' என்பதே பௌத்த கோட்பாடு.

ஆனால், ஒரு சில பிக்குகளின் அரசியல் அதுவல்ல. பிக்குகளின் அரசியல் என்பது கொலையும் செய்யும் என்பதற்கு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொலை நல்ல உதாரணம். இதேபோல் அது தீயோடும் விளையாடும் என்பதற்கு இறுதி உதாரணமே 13 தீயிட்டு கொளுத்தியமை - என்றுள்ளது. (ம-110)

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு பதவி துறந்தார் வடிவேல் சுரேஷ்!

கொழும்பு, பெப். 12

ஐக்கிய மக்கள் சக்தியில் தான் வகித்த அனைத்துப் பதவிகளில் இருந்தும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கடந்த வியாழக்கிழமை விலகியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஏற்பட்ட பிளவுதான் அவர் பதவி விலகியமைக்கான காரணம் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச்செயலாளர் மற்றும் பசறை தொகுதி அமைப்பாளரான வடிவேல் சுரேஷால், உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, பசறை லுணுகலையில் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பங்கேற்பார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. மக்களும் காலை முதல் கூட்டம் நடைபெறும் இடத்தில் காத்திருந்தனர். எனினும், சஜித் வரமாட்டார் என திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது. திடீர் சுகயீனமே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், வெலிமடை பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் சஜித் பங்கேற்றுள்ளார் எனவும், இதனால் ஏற்பட்ட அதிருப்தி மற்றும் மக்கள் ஏமாற்றப்பட்டமை ஆகியவற்றை கருதியே வடிவேல் சுரேஷ் இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-44)

## இலங்கைக்குக் கடன்

# நாணய நிதியத்தால் மீண்டும் நிபந்தனை

கொழும்பு, பெப்.12

இரு தரப்பு கடனாளிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்நிவாரண உறுதிமொழியைப் பொறுத்தே இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலரை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில்;

இலங்கை தனது கடனாளிகளிடமிருந்து கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான நிதி உத்தரவாதங்கள் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு நம்பிக்கை யுடன் முயற்சிகளை மேற்கொள்வது மிகவும் முக்கிய மானது.

இருதரப்பு கடனில் இலங்கை செலுத்த வேண்டிய தொகையாக சீனாவின் பங்கு 52 சதவீதமும் ஜப்பானின் பங்கு 19.5 சதவீதமும் மற்றும் இந்தியாவின் பங்கு 12 சதவீதமுமாகக் காணப்படுகிறது.

ஏற்கனவே இந்தியா, பாரிஸ் கிளப் நாடுகள், பிணைமுறியாளர்கள் உட்பட இலங்கைக்கான கடன் கொடுநர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனினும் இலங்கையின் கடனில் 52 வீதத்தைக் கொண்டுள்ள சீனா மாத்திரமே சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு பொருத்தமற்ற இரண்டு வருட கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

பணியாளர் ஒப்பந்தம், கடனாளிகளிடமிருந்து உடன்படிக்கைகள் ஆகியவை பெறப்பட்டவுடன் இலங்கைக்கான நிதி விடுவிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# துப்பாக்கியுடன் இருவர் கைது!

கொழும்பு, பெப். 12

நாட்டின் இருவேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் இருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான இருவரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)



# இந்திய அமைச்சர் ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணம் வருகைதந்த இந்திய அமைச்சர் வேல்முருகன், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார். குறித்த சந்திப்பில் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை மற்றும் சேந்தில் தொண்டமான் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஈழத்தமிழர்கள் ஏமாறப் பிறந்தவர்களே

**இ**ந்திய அரசாங்கத்தால் சுமார் 100 கோடி ரூபா பெறுமதியில் (இந்திய ரூபாவின் மதிப்பில்) யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் நேற்று இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கலாசார மத்திய நிலையத்தின் நிர்வாகம், அது அமைவுபெற்றிருக்கும் மாநகரசபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதே தமிழர்களின் ஏகோபித்த பெருவிருப்பமாக இருந்த நிலையில், வழக்கம்போல் தமிழர்களின் அபிலாஷைகளைப் புறந்தள்ளி, கொழும்புக்கு விசுவாசம்காட்டி ஜனாதிபதி ரணிலின் கரங்களில் பத்திரமாக ஒப்படைத்திருக்கின்றது இந்தியா.

இதுவரையான புரிதல்கள் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்தக் கலாசார மத்திய நிலையத்தின் நிர்வாகம் புத்தசாசன அமைச்சுக்கு உட்பட்ட விடயமாக மாற்றம் பெற்றிருக்கின்றது. இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ். மாநகரசபையின் உறுப்பினர்கள் மற்றும் கொழும்பின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக 10 பேர் கொண்ட குழு அடுத்த ஐந்து வருடங்களுக்கு இந்த கலாசார மத்திய நிலையத்தை நிர்வகிக்கின்ற போதிலும் இதன் ஒட்டுமொத்தப் பொறுப்பும் நிர்வாகமும் ஆளுகையும் இதர விடயதானங்களும் புத்தசாசன அமைச்சால் கட்டுப்படுத்தப்படும் விடயங்களாகவே அமைந்திருக்கின்றன.


இங்குதான் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை – பெருவிருப்பங்களை இந்தியா எவ்வளவுதூரம் சிரத்தையில் ஏற்றிச் செயற்பட்டது – செயற்படுகின்றது என்பது காலக்கண்ணாடியாகப் புலப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் முழுக்க முழுக்க இந்திய அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட ஒரு கலாசார மத்திய நிலையத்தின் ஆட்சியை – பொறுப்பை – அந்த மாநகரசபையிடம் வழங்க முடியாத இந்திய அரசாங்கம் தமிழர்களுக்கு 13ஆவது திருத்தத்தைப் பெற்றுத்தரும் காலப்போக்கில் 13 பிளஸ் என்றவாறாகவும் செயற்படும் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டுவது எவ்வளவுபெரிய மடமைத்தனம்?

கலாசார மத்திய நிலையம் கையளிக்கப்பட்டதில் 'இராஜதந்திர நகர்வின் அடிப்படையில்' தான் செயற்பட்டுவிட்டதாக எண்ணி இந்தியா பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால், உண்மையில் அது கொழும்பிடம் வழக்கம்போல் ஏமாற்றமடைந்துள்ளது என்பதே பட்டவர்த்தனம். ஒரு நாட்டின் தலையீடுடன் அமைக்கப்படும் கலாசார மையம் என்பது வெறும் சிமெந்துக் கட்டடமல்ல. அது இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையை – கலாசாரத்தை – பண்பாட்டை – விழுமியங்களை – பாரம்பரியங்களைப் பறைசாற்றும் வகையிலேயே அமையும், சர்வதேச அவதானிப்பு இது. ஆனால், இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கொடுத்துள்ளது வெறும் சிமெந்துக் கட்டடம்தான். அந்தக் கலாசார மத்திய நிலையத்தினூடாக கலாசாரக் கடத்தலை கொழும்புதான் கனகச்சிதமாக மேற்கொண்டிருக்கின்றது. இலங்கையின் பண்பாடும் பாரம்பரியமும் பௌத்தத்தைச் சார்ந்தது என்ற செய்தியை, புத்தசாசன அமைச்சிடம் கலாசார நிலையத்தைப் பாரப்படுத்தி சொல்லாமல் சொல்லியிருக்கின்றது கொழும்பு.

ஆக, தானும் ஏமாந்து தமிழர்களையும் ஏமாற்றியிருக்கின்றது இந்தியா. அதிலும் இந்து சமயத்துக்கும் அதன் வழிபாட்டுத் தலங்களுக்கும் எதிரான ஆக்கிரமிப்புக்களில் இருந்து இந்தியாதான் தம்மைக் காப்பாற்றவேண்டும் என்று மலைபோல் நம்பியிருந்த – நம்பியிருக்கின்ற இந்துக்களுக்கும் சைவர்களுக்கும் இந்தக் கலாசார மத்திய நிலையத்தின் நிர்வாகம் பற்றிய திரைமறைவு நடவடிக்கைகள் பெரும் துயர்கதையே. ஆச்சரியங்களுக்குள் எல்லாம் ஆச்சரியம் என்னவென்றால், இந்து மதத்தை பூகோள மயப்படுத்த படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும் ஆளும் பாரதிய ஜனதாவின் ஆட்சியில் இதுவெல்லாம் நடந்தேறியதுதான். ஒரு கட்டடத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தையே நம்மிடம் தரமறுக்கும் இந்தியாவும் இலங்கை அரசும் நமக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களோடு மாகாணசபையைத் தருமென்று நம்பிக் கொண்டே இருப்போம். ஏனெனில், நாமெல்லோரும் ஏமாந்துபோவதற்காகவே பிறந்த ஈழத்தமிழர்கள் அல்லவா!

**நாளொரு நல்வார்த்தை**

"முயற்சி எல்லா நேரத்திலும் மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை; ஆனால், முயற்சி இல்லாமல் ஒருபோதும் மகிழ்ச்சி கிடைப்பதில்லை" – **டிஸ்ரேலி**



# போலிப் பரப்புரையில் ஈடுபடுகிறது தமிழரசு!

## *ரெலோ பரபரப்புக் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், பெப். 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்துசென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி, தற்போது போலிப் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி பிரிந்து தனித்துப் போட்டியிடுவதாக முடிவெடுத்த பின்னர், தற்போது மக்களிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகள்தான் தமிழரசுக் கட்சியை வெளியேற்றின என்று பொய்யான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இப்போது தமிழரசுக் கட்சி தன்னை, தான் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று அடையாளப்படுத்த ஆரம்பித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஐந்து கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்புத்தான். ஒரு தனிக்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்று ஆகிவிடாது. எதிர்காலத்தில் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளை உள்வாங்கி ஒரு பலமான இயக்கமாக செயற்படும் - என்றார். (ம-20)

# இந்திய அமைச்சர்குழு பருத்தித்துறை பயணம்

கொழும்பு, பெப். 12

இந்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் எல். முருகன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்துள்ள இந்தக் குழுவினர் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அங்கு பலதரப்புச் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பின்னணியிலேயே அவர்கள் பருத்தித்துறை மீன்பிடித்துறைமுகத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு பலதரப்புச் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக மீனவர்களுடன் சந்திப்பை நடத்தி மீனவர்கள் மேற்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர். மீனவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான மானிய உதவிகள் வழங்குவது தொடர்பிலும் அவர்கள் கலந்தாலோசித்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் வடமராட்சி மீனவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்துவதுடன், அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையை இந்திய அதிகாரிகள் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் அவ்வாறு கட்டுப்படுத்தினாலேயே தங்களுடைய வாழ்வாதாரம் மேம்படும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

**நாளை** 13.02.2023 திங்கட்கிழமை மாசி 01

சுபநேரம் : 12.34 - 02.04

ராகுகாலம் : 08.04 - 09.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் உயிர்மாய்க்கும் நிலைமைக்கு அரசே பொறுப்பு

## நெற்செய்கையாளர்கள் ஆதங்கம்

முல்லைத்தீவு, பெப். 12

உணவுப் பற்றாக்குறைக்கு பொறுப்புக்கூறும் விவசாயத்துறை வீழ்ச்சிக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு. விவசாயி தோற்றால் அந்த நாடே தோற்றுப் போகும் என்பதை அனைவரும் உணர வேண்டும் என முல்லைத்தீவைச் சேர்ந்த விவசாயி ஒருவர் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளி வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த குறித்த விவசாயி மேலும் கூறுகையில்,

நந்திக்கடல் ஓரமாக 6 ஏக்கர் பரப்பளவிலும் முள்ளிவாய்க்கால் பகுதியில் 19 ஏக்கர் வயல் பரப்பளவிலும் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏக்கருக்கு 18 ஆயிரம் ரூபா வீதம் இயந்திரக் கூலி மற்றும் 3ஆயிரம் ரூபா வீதம் 4 பேருக்கு ஆட்கூலி கொடுத்து அறுவடை பெறப்பட்டது. கடந்த வாரம் பெய்த மழையால் அதில் 15 ஏக்கரில் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. இந்நிலையில் 46 மூடைகள் மாத்திரமே பெறப்பட்டு பெரும் நட்டமே விளைந்துள்ளது.

அதேவேளை அரசாங்கத்தால் நெல் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அறுவடை செய்த நெல்லுக்கு நியாய விலையின்றி அடிமட்ட விலைக்கே கொள்வனவு செய்ய இடைத்தரகர்கள் நாடுகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றும் விவசாயிகளின் துன்பங்கள், அவர்களின் இழப்புகள், உடலுழைப்பு மற்றும் நிதிச்செலவு ஆகியவற்றை அரசாங்கம் கருத்திற்கொள்ளவில்லை. பசளை, உரம், எரிபொருள் விலை என அனைத்தின் விலை யேற்றத்தின் மத்தியிலும் விவசாயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் பொருளாதாரப் பின்னடைவை - பெரும் நட்டத்தை எதிர்நோக்க நேரிடுகிறது. இந்த நிலையில் இந்த நாட்டில் எவ்வாறு விவசாயி வாழமுடியும்? இதனால் மருந்து குடிக்கும் நிலைக்கே நாம் தள்ளப்படுகின்றோம் என்றும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். (ச-19)

# தேர்தலை முன்னிலைப்படுத்தி அபிவிருத்திப் பணிகள் முடக்கம்

## சபை அமர்வில் இருவர் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், பெப்.12

உள்ளூராட்சித் தேர்தலைக் காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகள் முடக்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்களுக்கென ஒதுக்கிய நிதியில் வேலைத்திட்டங்கள் இன்னமும் முழுமை பெறவில்லை எனத் தெரிவித்து சாவகச்சேரி பிரதேசசபை அமர்விலிருந்து இரு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசசபை அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

அமர்வில் உறுப்பினர்களுக்கு 2021 ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து சில இடங்களில் மின்விளக்குகள் இதுவரை பூட்டவில்லை. இந்த வேலைத்திட்டங்கள் குறித்து கடந்த அமர்வின் போது சுட்டிக்காட்டியபோதும் இன்னமும் முழுமை பெறவில்லை என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அப்போது தேர்தல்கள் திணைக்களத்தால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் தேர்தல் முடியும்வரை அபிவிருத்தி தொடர்பான பணிகளை முன்னெடுக்கமுடியாது என செயலாளர் குறிப்பிட்டார். அதற்கு தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ச.தங்கராசா,

"எங்கள் பிரதேசசபையால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகள் ஒற்றுமையின் அடிப்படையில் புரிந்துணர்வு அடிப்படையில் எல்லா உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எங்கள் பிரதேசத்தின் அபிவிருத்தி பின்னோக்கிச் செல்வதற்கு நாங்கள் காரணமானவர்களாக இருக்கக்கூடாது. இந்த மின்விளக்குப் பொருத்தும் விடயத்தை தேர்தல் காரணத்தைக் காட்டி பிற்போடக்கூடாது. எனவே அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்படும் காரணத்தால் நான் வெளியேறுகின்றேன்" எனக் கூறி வெளிநடப்புச் செய்தார்.

தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உபதவிசாளர் செ.மயூரனும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாத சபையில் கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வழங்க முடியாது எனத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார். (ச-159)

# திருக்கேதீச்சர மனித எச்சங்கள்; ஆய்வுக்கு 8 மாதங்கள் தேவை

## மருத்துவ குழாம் மன்றில் அறிக்கை



மன்னார், பெப்.12

மன்னார் திருக்கேதீச்சர மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு எட்டு மாதங்கள் தேவைப்படும் என மருத்துவ குழாம் மன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி வழக்கு கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் குற்றப் புலனாய்வு பிரிவினரைச் சேர்ந்த பண்டார மற்றும் மனோஜ் ஆகியோரும் சட்டவைத்திய அதிகாரி டீ.எல்.வைத்தியரத்தின மற்றும் ஹேவகே ஆகியோருடன் கொழும்பிலிருந்து வருகை தந்த குற்றப் புலனாய்வு பிரிவினரும் மன்றில் முன்னிலையாகினர்.

காணாமற் போனோர் குடும்பங்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி றனித்தா ஞானராஜா, சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இதுதொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்;

ஏற்கனவே குறித்த மனித எச்சங்களின் பகுதியை பிரித்தெடுத்து அமெரிக்க புளோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான பகுப்பாய்வை அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் மேற்பார்வை செய்து மன்னார் நீதிமன்றுக்குப் பாரப்படுத்த மன்னார் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

அதன்படி கடந்த ஜனவரி 9 ஆம் திகதி மனிதப் புதைகுழியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கொண்ட 81 பெட்டிகளிலிருந்து 5 பெட்டிகளில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன.

இவை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்ற காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு இந்த 81 பெட்டிகளிலிருந்து முப்பது வரையான பெட்டிகள் ஏற்கனவே சட்டவைத்திய அதிகாரி ஒருவரால் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அவற்றைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 81 பெட்டிகளிலுமுள்ள மனித எச்சங்களின் எலும்புகளிலிருந்து வயது, பால் இறப்புகளுக்கான காரணம் போன்ற விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்த எட்டு மாத காலங்கள் தேவைப்படும் என மருத்துவ குழாத்தினர் மன்றில் தெரியப்படுத்தியிருந்தனர்.

அதனடிப்படையில் வழக்கின் மேலதிக நடவடிக்கைகளுக்காகவும் நடவடிக்கை அறிக்கைகளுக்காகவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது என நீதிமன்றில் கட்டளை பிறப்பித்தது - என்றார். (ச-60)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும், எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
23 • 11 • 1951



விண்ணில்
10 • 02 • 2023

## திருமதி சிவலிங்கம் ஜெயலட்சுமிதேவி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் ஜெயலட்சுமிதேவி நேற்றுமுன்தினம் (10.02.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா துரையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், தர்சினி, சிவனேசன் (கனடா), வசந்தகுமாரி, அமுதினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணேந்திரன் (குணம் மில்), தங்கலட்சுமி (கனடா), காலஞ்சென்ற உருத்திரநாதன், ஞானம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கலைமகள், லகுஷாந், அனுசியா (கனடா), துஷ்யந்தன் (கனடா), கஜீபா (கனடா), துவந்திகா - மதியுகி (லண்டன்), மயூரதன், அஜேனா (கனடா), விஸ்னு (கனடா), விஜிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
குணேந்திரன் (மில் தம்பி)
077 059 1763 / 077 691 3272

பங்களா வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 • 09 • 1932



மறைவு
11 • 02 • 2023

## திருமதி நாகம்மாள் இராசையா

**(இளைப்பாறிய ஆசிரியை, ஸ்ரீ கணேசா வித்தியாலயம், சரசாலை)**

கோப்பாய் வடக்கு, வராம்பற்றையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மாள் இராசையா அவர்கள் நேற்று (11.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா (கோப்பாய்) கண்மணி (திருநெல்வேலி) தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இராசையா (பிளான்டேசன் ஓவசியர், நல்லூர் வடக்கு, சந்திரசேகர் பிள்ளையார் கோவிலடி) அவர்களின் மனைவியும், யாழினி, குமுதினி, றூபகுமாரன் (போதகர்), காலஞ்சென்ற சிவகுமாரன் (தொழில்நுட்ப படவரைஞர்) ஆகியோரின் தாயாரும், மகேஸ்வரன் (இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி), சுப்ரமணியம் (இளைப்பாறிய முகாமைத்துவ அலுவலர், கிளிநொச்சி கச்சேரி), மரியா (உயர்கல்வி ஆசிரியை) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, இரத்தினம் (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்கள்), கமலாதேவி, குகதாசன், பரமேஸ்வரி மற்றும் பாலசுப்ரமணியம் (இளைப்பாறிய நிர்வாக அதிகாரி, சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் தொழில் திணைக்களம்), செல்வரஞ்சி (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர், விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி) ஆகியோரின் சகோதரியும், தனலக்ஷ்மி, லலிதா, அருமைத்துரை, மனோன்மணி, காலஞ்சென்றவர்களான ராஜரத்தினம், துரைச்சாமி, யோகேஸ்வரன், மயில்வாகனம், சிவகொழுந்து, ராஜேந்திரம், கெங்கநாதன், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், நிரஞ்சனி, துஷ்யந்தினி, விஜேகரன், திபாகரன், சர்மினி, றொஷானி, முகுந்தினி, காலஞ்சென்ற ஜங்கரன், கிரிதரன் ஆகியோரின் மாமியும், உதயகுமார், விஜயகுமார், சசிகுமார், டிலானி, தர்சினி, டினேஷ், சோபிதன், டிலக்சன், காலஞ்சென்ற சுமதி ஆகியோரின் பெரிய தாயாரும், மயூரன்(ஹொட்டேல் முகாமைத்துவ மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி).பிரணவன் (உயர்தரம், பரியோவான் கல்லூரி).மதுரா (உயர்தரம், இந்துமகளிர் கல்லூரி), மயூரா (நரம்பியல் மருத்துவ ஆராய்ச்சியாளர், ஒக்ஸ்போட் பல்கலைக்கழக வைத்தியசாலை).செந்தூரன் (தலைமை பொறியியலாளர், தரக்கட்டுப்பாடு, திட்ட முகாமைத்துவம்), டினேஸ் (கணினி பொறியியலாளர்), வாகினி (வைத்தியர், கொழும்பு போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பேர்த்தியும், விகானின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 077 88 66 894**
**குமுதினி சுப்ரமணியம் (மகள்)**

தகவல்: குடும்பத்தினர்,
கைலையம்பதி
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

# கண்சிகிச்சை முகாமும் கண்ணாடி வழங்கலும்

யாழப்பாணம் பெப் 12

காங்கேசன்துறை கோல்டன்ஸ்ரார் லயன்ஸ் கழகத்தால் அராலி பிரதேச மக்களுக்கான இலவச கண் சிகிச்சை முகாமும் மூக்குக்கண்ணாடி வழங்கலும் லயன் பத்மராசாவின் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அராலித்துறை வேலவன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ய-9)


Founded 1981 NCASL Incorporated 1989

# இலங்கை தேசிய நிர்மாண சங்கம்
# வடமாகாணக் கிளை
# உடனடி வேலைவாய்ப்பு

❖ **நிர்வாக உத்தியோகஸ்தர்**
**(ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)**
தகைமை :- 2 வருடகால அனுபவம். ஆங்கில அறிவு மற்றும் சிங்களம் பேசக் கூடியவர் விரும்பத்தக்கது.
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்)

❖ **அலுவலக உத்தியோகஸ்தர்**
**( ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)**
A/L கல்வி தகைமையுடன் கணினி பற்றிய அறிவு கட்டாயமானது.

தகுதியானவர்கள் தமது சுயவிபரக் கோவையை எதிர்வரும் 24.02.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கீழ்வரும் முகவரிக்கு (தபால் அல்லது ஈமெயில் ) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்**
**( வடமாகாணக் கிளை)**
**நாவற்குழி மேற்கு, நாவற்குழி, யாழ்ப்பாணம்.**
**Email : ncaslnb2014@gmail.com**


# அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் பகுதித்
தலைவரும் ஆசிரியருமான

## திருமதி பிரேமாவதி தியாகலிங்கம்

அவர்கள் இன்று தனது
**அறுபதாவது அகவைத் தினத்தைக்**
கொண்டாடுகின்றார். எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய இவரை பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு இவர் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- அதிபர் , உபஅதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள் , கல்விசாரா ஊழியர்கள்
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

# மரண அறிவித்தல்

## இராசநாயகம் பராசக்தி

பிறப்பு 24. 01. 1933 — இறப்பு 10.02.2023



திருநெல்வேலி மேற்கு பத்ரகாளி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் பராசக்தி கடந்த (10.02.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாபதி அம்மாப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அம்மாப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், சிவனாதனின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி, சிவபாக்கியம், யோகம்மா, சீவரத்தினம் மற்றும் தங்கப்பொன் (இளைப்பாறிய ஆசிரியர்)) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசரத்தினம், விஸ்வலிங்கம், கனகம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பால்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P. 077 226 9932**

தகவல்
இ.சிவநாதன்
(மகன்)

(cs.23457) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நகரில் இருவருக்குரிய சிறிய அழகான வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. படிக்கும் மாணவர்களுக்கு அறைகள் மற்றும் களஞ்சியசாலை(45x12) வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 345 0039,077 348 0039

## மணப்பெண் தேவை

**இந்து, கௌரவகுலம் (V), Australia Citizen**
**பின்வரும் மாப்பிள்ளைகளுக்குப் பெண் தேவை**

01. மானிப்பாய் - நாவற்குழி. 1990. பூரட்டாதி. CPA, ACMA, CGMA, Masters of Commers, CIMA, Business Administration Manager.
02. உசன் - கரவெட்டி. 1990. சதயம். Phd, Data Scientiest
03. ஆனைப்பந்தி - மானிப்பாய். 1992. பூராடம். MBA, MEng (Civil), Civil Engineer
04. கொக்குவில் - கந்தர்மடம். 1992. புனர்பூசம். Bachelor of Computer System Engineer.
05. புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம். 1992. விசாகம். BSc Civil Engineering, CIMA, Fully Qualified, Accountant.
06. நயினாதீவு. 1992. அனுசம். Master of Engineering, Civil Engineer.
07. சாவகச்சேரி - Jaffna Town. 1988. பூரட்டாதி. BEng, Civil Engineer
08. Jaffna Town. 1988. அனுசம். B.Com Degree, Accountant.
09. மானிப்பாய் - கொக்குவில். 1984. சுவாதி. CIMA, IT Engineering, MBA, Business Analyst.
10. யாழ்ப்பாணம். 1984. ரேவதி. Bachelor Of Information Technology.
11. பருத்தித்துறை - யாழ்ப்பாணம். 1993. அனுசம். BSc Engineering, Civil Engineer.
12. மல்லாகம். 1985. பூரட்டாதி. Bachelor Of Software Engineering (Australia) Software Engineer.
13. ஏழாலை - இணுவில். 1986. அச்சுவினி. IT Degree (Australia)
14. அரியாலை. 1982. ரேவதி. BEng (Hons), Engineer
15. மாவிட்டபுரம் - இணுவில். 1985. சதயம். Civil Engineering, Charted Accountant.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## மரண அறிவித்தல்



சாங்கீத வித்துவான் திருமதி

**ஜஸ்ரின் ஞானசேகரம் மேரி சறோஜா**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

தோற்றம் 25.03.1952 மறைவு 09.02.2023

இல. 203/10, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜஸ்ரின் ஞானசேகரம் மேரி சரோஜா கடந்த (09.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகளும்; காலஞ்சென்றவர்களான நிக்கிலஸ் - ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஜஸ்ரின் ஞானசேகரத்தின் அன்பு மிகுந்த மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானமணி, திரேசம்மா, அடைக்கலம் நித்தியானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சாருமதி (முகாமையாளர் - இலங்கை வங்கி, கல்வியங்காடு கிளை), ஜோர்ஜ் பிரதீபன் (Staff - MAG), பிறின்ஸ் பிரியதர்ஷன் (பொறியியலாளர் - கொழும்பு), பிரசன்னா (Medical Representative - Pharma Associates) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வோல்வின் (ஆசிரியர் - சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை), ரொசினா, பர்மியா (ஆசிரியை - கொழும்பு திருக்குடும்ப கன்னியர் மடம்), சரண்யா (மேலதிக விவாகப் பதிவாளர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், டிலன், கெய்லினா, கெய்நிஷா, ஹர்ஷிதா, கௌசாக்யா, ஆதுரி, அதிதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரரின் பூதவுடல் நாளை (13.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

203/10, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

வோல்வின் - 077 704 1322
பிறின்ஸ் - 077 390 3009
பிரசன்னா - 077 341 2943

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Hero Deluxe மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 998 0693**
**076 020 5888**

## அலுவலக வேலையாட்கள் தேவை

எமது GM நிறுவனத்தின் (The great masters) புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. சிறந்த தொழிலொன்றை தேடும் உங்களுக்கான வாய்ப்பொன்றை வழங்குவதனைக் கருத்திற்கொண்டு மிகக் குறைவான தகைமை அடிப்படையில் இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு:
**077 99 69 160**
**077 94 08 007**

CS 23460 (1-6)

## ஆலய அர்ச்சகர் தேவை

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையிலுள்ள ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்திற்கு நாளாந்தம் காலை, மாலை இரு நேரப் பூஜை செய்வதற்கு அர்ச்சகர் தேவை.

இவ்வர்ச்சகருக்கு உதவியாக ஒரு உதவி அர்ச்சகரும் தேவை. இவர் சில சமயங்களில் பூஜை செய்யக் கூடியவராகவும், மடப்பள்ளி வேலைகள் செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர் பரிபாலன சபை
077 10 94 085

(CS 23459) 1-6

## கண்ணிவெடியகற்றும் பணிக்கு வாடகைக்கு வாகனங்கள் கோரப்படுகின்றன

**பாரவூர்திகள் (கன்ரர்) :-**
பெட்டி 14 1/2 அடிக்கு மேலும், கூடாரம் மற்றும் இருபக்க இருக்கைகள் கொண்டிருத்தல் வேண்டும்.

**பேருந்துகள் :-**
56 இருக்கைகளுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

**TATA 207 சிற்றூர்தி (pick up) (பிக்கப்) :-**
கூடாரம் மற்றும் இருபக்க இருக்கைகள் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு :-
076 010 6537, 076 010 6540,
077 234 9828

Field Manager,
Operation Office,
DASH Mine Clearance
Selva Lane, Ananthapuram, Kilinochchi.

## ஓராண்டு நினைவு

அன்னை மடியில் 06 . 07 . 1945



ஆண்டவன் அடியில் 12 . 05 . 2022

**திருமதி ஜெயராணி அருளப்பு (இராசாத்தி)**
**(மயிலிட்டி)**

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லாத ஒளி அவவுக்கும் பிரகாசிக்கக்கடவது.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### மட்டுவில் லூர்த்து மாதா திருச்சொரூப பவனி இன்று

சாவகச்சேரி, பெப். 12

மட்டுவில் வடக்கு அருள்மிகு லூர்த்து மாதா தேவாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு மாதா திருச்சொரூப பவனி ஆலய பங்குத்தந்தை ஞானரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

*(ஒ-131)*

## வீடு விற்பனைக்கு

பம்பலபிட்டிய Flats இல் **3 BED Room, 2 BATH Room** உடன் வீடு விற்பனைக்கு

தரகர் தேவையில்லை

0778651001
0773334000

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்.

077 334 1281 (22911) 4,6)

## முச்சக்கரவண்டி விற்பனைக்கு

TVS KING
NP ABC xxxx
தொடர்பு: 077 691 3058

## வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் முதலாம் மாடி கடைகள் வாடகைக்குண்டு.
அலுவலகத்துக்கும் ஏற்றது.

077 828 1956 (CS.23455) 4,6)

## A/L Chemistry வகுப்பு

(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

உயர்தர மாணவர்களுக்கான இரசாயனவியல் வகுப்பு தனியாகவோ, குழுவாகவோ நடைபெறும்.

075 262 0574 (CS/23456) 4,6)

## குத்தகைக்கு வாகனங்கள் தேவை

நிறுவனமொன்றுக்கும் தனிப்பட்ட பாவனைக்கும் நீண்டகால குத்தகைக்கு வாகனங்கள் தேவை.

077 640 9492,
074 007 9969 (CS/22979) 4,6)

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு **சிட்டை எழுதுநர் / அலுவலக உதவியாளர் / கணினி இயக்குநர்** பணிகளுக்கு பெண்பணியாளர் தேவை.

**(வயது 18 - 35 வரை)**

**077 122 8841 / 075 881 0010**

யாழ்.நகரிலிருந்து 5km உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை (CS/23454)4,6

## சொர்க்கம் திருமணசேவை

[கனடா]

கனடாவில் வசிக்கும் உத்தராடம் தனுசு ராசியில் 1987 இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற (Civil Engineer) மணமகனுக்கு உள்ளூரில் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
**00141 6666 1855(கனடா)**
**077 650 5097**
**077 200 0230**

## பட்டதாரி ஆசிரியர்கள் போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

அரச சேவையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,உத்தியோகத்தர்கள், பட்டதாரிகளை ஆசிரிய சேவையினுள் உள்ளீர்க்கும் போட்டிப்பரீட்சை வகுப்புகள் 12.02.2023 இலிருந்து ஆரம்பமாகின்றன.

**இடம்:இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம் (திருநெல்வேலி)**
**நேரம்:சனி, ஞாயிறு** 3pm-5pm
**காலம்:03 மாதங்கள்**

துறைசார் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களின் நெறிப்படுத்தலின் கீழ் விரிவுரைகள் இடம்பெறும்.

நிர்வாகம்:
077 465 2439/076 685 2529


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த (19.01.2022) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

## அமரர் பரமநாதர் நாகேஸ்வரி

தோற்றம் 19 . 02 . 1934



மறைவு 19 . 01 . 2022

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின வீட்டுக்கிருத்தியம் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவன்கோவிலடி வீதி,
காரைநகர்.

(CS/49015)4,6

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 14.01.2023 சனிக்கிழமை
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்

## தியாகராஜா சிவயோகம்

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3ம் கட்டை, மானிப்பாய் றோட்,
ஆனைக்கோட்டை.

(CS/23439)(4,6)

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (15.01.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தாயார்

## அமரர் திலகவதி கணபதிப்பிள்ளை



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (11.02.2023) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (13.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்


சப்பச்சிமாவடி
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 794 9075
077 638 8843

(cr.39237) (2 6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1947



மறைவு 09 . 02 . 2023

## சின்னத்துரை ரட்ணராஜா

மாத்தளை உக்குவெலவை பிறப்பிடமாகவும், 588/8, நாவலர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ரட்ணராஜா அவர்கள் கடந்த (09.02.2023) வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், டினேஸ்க் (ஜனசக்தி இன்சூரன்ஸ் - யாழ்ப்பாணம்), டினேந்திரன் (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கயாழினி (ஆசிரியர்- யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி), சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்மதுரை (கனடா), காலஞ்சென்றவர்களான யோகராஜா, சேதுராஜா, சிவராஜா, தர்மராஜா, சந்திரோதயம், சிவபாக்கியம், முகுந்தராஜா மற்றும் குகராஜா (திருகோணமலை), இந்திராணி (மட்டக்களப்பு), சரஸ்வதி (கனடா), சண்முகராஜா (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சதானந்தன், நித்தியானந்தன், மனோகரன், ரஞ்சிதராஜா, லோகேஸ்வரன் மற்றும் இந்துமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், லருண், நௌனீகன், யோய்சாய், ரகுராம், காருண்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.588/8, நாவலர் வீதி, அரியாலை.
0777 399 678, 077 279 6694

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 05 - 1927



மறைவு 09 - 02 - 2023

## இரத்தினம் சிவக்கொழுந்து

அளவெட்டி மத்தி, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவக்கொழுந்து கடந்த (09.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கதிரித்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சுப்பையா முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரு. இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகையா, சின்னராசா, தில்லையம்பலம், வேலும்மயிலும், வீரசிங்கம், துரைராசா, பத்மராணி மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம், மோகனதாஸ் மற்றும் கணேசதாஸ் சாரதா, தேவதாஸ், சாந்தினி, சசிகலா ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சத்தியா மற்றும் வனிதா, சயந்தன், சதீஸ், சரூபன், சாதனா, லக்ஷன், லவசன், சண்முகபிரியா, ஸ்ருதி ஆகியோரின் பேர்த்தியும், மல்லிகா, சோமசுந்தரம், நல்லம்மா, சிவனேஸ்வரி, தர்மகுலராஜா கெங்காதரன் ஆகியோரின் மாமியாரும், கபிஷன், டிலுசன், ஓவியா, வெண்பா, ஆருஷன், ஆர்யா, அக்சரா, சாருஜா, அபிசா, அம்பிகை, எலியால், சீலாஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொக்குவில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பள்ளியவத்தை,
[illegible] அளவெட்டி.
077 921 8639

(cs.49064) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோக சுவாமிகள் திருவடி நிலைய



## முதியோர் இல்லம் பணிநிலை வெற்றிடம்

எமது இல்லத்தில் கீழ்வரும் பதவிக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவத்தினை இல்லத்தில் பெற்று அதனை பூர்த்திசெய்து எதிர்வரும் **01.03.2023** க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு இல்லத்தில் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- **கணக்காளர் :** க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக பிரிவில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டுவருடம் பணியாற்றிய அனுபவத்தினை கொண்டிருக்க வேண்டும்.
- **ஆண் பராமரிப்பாளர்கள்:** சிறந்த தொடர்பாடல் திறனும் நன்நடத்தையும் தேக ஆரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்.
- **பெண் பராமரிப்பாளர்கள்:** சிறந்த தொடர்பாடல் திறனும் நன்னடத்தையும் தேக ஆரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்.
- **சாரதி:** இலகுரக வாகனங்கள் செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் அத்துடன் முக்கியமாக உழவியந்திரத்தினால் உழவு செய்யும் அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- **சமையலாளர் ஆண்:** துப்பரவாகவும் சுத்தமாகவும் சமையல் செய்யக்கூடிய அனுபவமுள்ள ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.
- **மருத்துவமாது :** உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியுடன் வெளிவாரியாக தாதியர் பயிற்சியினை முடித்த ஒருவர்.

**அனைவருக்கும் பொதுவானவை:**

1. மூன்று மாத காலம் தகுதிகாண் காலமாக கருதப்படும்.
2. அதன்பின் பணியில் திருப்திகரதன்மை காணப்படும் பட்சத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
3. மேலும் தங்குமிடம் மற்றும் மூன்று நேர உணவுடன் ரூபா 25000தொடக்கம் 45000 வரை சம்பளம் வழங்கப்படும்.
4. மருத்துவமாது மற்றும் கணக்காளருக்கு ரூபா 35000தொடக்கம் 45000வரை சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

**குறிப்பு: -**
குறித்த இல்லத்தின் வேலைகளின் நோக்கங்களில் முதன்மையானது முதியவர்களை சிறப்பாக பராமரித்து அவர்களுடைய உடல் உள ஆரோக்கியத்திற்காக பாடுபடுதல் ஆகும். இங்கு பணத்தினை விட சேவைநோக்கமே மேலாக கவனிக்கப்படும்.

**வன்னேரிக்குளம், கிளிநொச்சி**
**அலுவலகம் - 021 313 5680**
**தலைவர் - 076 436 3041**

## விற்பனைக்கு

பால் கறக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு.

திருவாசகம் முதியோர் இல்லம், இல.89, செட்டித்தெரு, நல்லூர்.
**077 528 5213** (CS/23242) 4.6)

---

Share இம் மதிப்புமிக்க செய்தியை உங்கள் வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கு மூலம் பகிரவும்

**➡ VAJIRA HOUSE**



திருப்தியடைந்த வாடிக்கையாளர்களின் **VIDEOS** பார்வையிட

வஜிர ஹவுஸ் இணையத்தில் உள்நுழைக
**www.vajirahouse.net**
(வாழ் நாள் உத்தரவாத வீடுகள்)

**உங்கள் நிலத்தில் வீட்டை கட்டி கொள்ளலாம்**
➡ யாழ்ப்பாணம் ➡ வவுனியா ➡ கண்டி
➡ மன்னார் ➡ கொழும்பு ➡ முல்லைத்தீவு

வெளிநாட்டவருக்கு 2 வது இல்லம், உங்கள் விடுமுறையை கழிக்க

~~109 lakhs~~ **99 lakhs**



ரூ **10,000** செலுத்தி வீட்டு வேலையை ஆரம்பிக்கலாம்.

இன்றே அழையுங்கள் Ms.Sanjeevkumar 24 hrs **0719 228 888**

**1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக**
பிரித்தானிய ஆட்சிக்கால வரலாறு உடைய
**வஜிர ஹவுஸ்**
23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிடி

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்பாணத்தில் கொக்குவில் Champion வீதியில் 1.75 ( ஒண்றே முக்கால் பரப்பு ) காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**021 205 2323 / 077 301 3236**

## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்துக்கு Light Vechile, Auto லைசென்ஸ் உள்ள ஆண் வேலையாள் தேவை.

**075 258 9665, 077 851 1265**
Jaffna & GG Center (CS/23242) 4.6)

## உடனடி வேலைவாய்ப்பு

**Distribution** நிறுவனத்தில் **Sales Rep** ஆகப் பணியாற்ற ஆள் தேவை. மாத ஊழியம் 32,000/= + கமிசன்.

அழைக்கவும்:-
**077 473 7737** (CS/23333) 4.6)

## விற்பனைக்கு

ஹீரோ. பிளசர், 2019 ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு.
விலை 420000/= (CS 23451) (2.6)

**T.P.: 077 163 2061**

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் K.K.S. Road திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு அருகாமை உள்ள வீதியில் 4 Rooms / 2 Bathrooms வீடு வாடகைக்கு உண்டு.

**0777 12 68 59 / 60** (ACO 22980) 1-6

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள வியாபார நிலையத்துக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

**வேலை நேரம் :-**
**காலை 9.00 - 8.00**

**077 729 0300** (CR 49057) (3/6)

---

PFIRC

## பிரசாந்த்

குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

No.77, Harrington Road, Chetpet, Chennai – 600 031, Tamilnadu, India.

INTERNATIONAL ACCREDITED CLINIC
Prashanth Fertility Research Centre



medicare

**இலவச மருத்துவக் கண்காட்சி!**

**3rd, 4th, 5th MARCH 2023**

**கொழும்பு BMICH**

**Stall No. BP-1, BP-2, BP-3, BP-4**

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை நேரில் சந்தித்து உங்களது குழந்தையின்மைப் பிரச்சினைகள் பற்றிய இலவச ஆலோசனைகளைப் பெறலாம்

25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தம்பதியரின் குழந்தைக் கனவுகளை நனவாக்கி வரும் மருத்துவமனை

விபரங்களுக்கு:
**0760155883**



**பிரசாந்த்**
மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகளுக்கு மாபெரும் சிறப்புச் சலுகைகள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலைக்...

போரால் சொத்துக்களை இழந்தவர்களுக்கான இழப்பீடு மற்றும் வலி. வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு உதவித்தொகை என்பவற்றை வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. இந்த நிகழ்வுக்கான ஒழுங்கமைப்பு ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் காலம் என்பதால் அரசியல்வாதிகளுக்கு இந்த நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிகழ்வு ஆரம்பமாகி வரவேற்புரைக்கு யாழ். மாவட்டச்செயலரின் பெயர் அழைக்கப்பட்ட நிலையில், அமைச்சர் ஒருவர் அங்கு திடீரெனப் பிரசன்னமானார். இதனால் யாழ். மாவட்டச் செயலர் வரவேற்புரையை நிகழ்த்தாமல் திரும்பிச் சென்றார். இதனையடுத்து ஜனாதிபதி செயலக அதிகாரிகள் குழப்பமடைந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு வரவேற்புரை உள்ளிட்ட நிகழ்வுகளை நிறுத்திவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டு காசோலை வழங்கும் நிகழ்வுக்கு நேரடியாகச் செல்லுமாறு ஜனாதிபதி செயலக பணிக்குழாமினருக்கு அறிவுறுத்தினார். இதனையடுத்து அந்த நிகழ்வு இடம்பெற்றது. சுமார் 250 பேருக்கான காசோலைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனித்து நின்று முழுமையாக வழங்கி முடித்தார்.

இவ்வாறான உதவிகள் வழங்கும் நிகழ்வுகளில் வழமையாக ஜனாதிபதி சம்பிரதாயத்துக்கு ஒரு சிலருக்கு வழங்கி வைக்க ஏனையோருக்கு அங்கு பிரசன்னமாகும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் வழங்கிவைப்பார்கள். ஆனால், அழையா விருந்தாளியாக அமைச்சர் கலந்துகொண்டமையால் அதிருப்தியடைந்தமையாலேயே ஜனாதிபதி ரணில், தானே சகல காசோலைகளையும் வழங்கி வைத்தார் என்று அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

## ரணிலை...

போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில், தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் மாத்திரம் 'ஜெட்விங்' ஹோட்டலில் ரணில் விக்கிரமசிங்கவை தனித்துச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் 'உதயன் பத்திரிகைக்கு' விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண ஆளுநரின் அழைப்பை ஏற்று ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

இந்தச் சந்திப்பில் நீண்டகாலமாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கவேண்டும் என்றும், நீண்டகாலமாக இழுபறியில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகவும், புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகளிலுள்ள சிக்கல்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினேன்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், காணி விடுவிப்புத் தொடர்பில் உரிய தரப்புகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், முதலீடுகள் தொடர்பாக சாதகமான பதில்கள் ஜனாதிபதியிடம் இருந்து கிடைத்தன - என்றார். (அ-ஒ-26)

## சுதந்திரநாள்...

இராமநாதனுக்கு பிரமுகர் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் அவரும் கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுதந்திரநாள் கொண்டாட்ட நிகழ்வு யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் நேற்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இதில் பங்கேற்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி போன்ற கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. (அ-ஒ-5)





## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையின் முதற்தர நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

ஓய்வூதியர்களும் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை 18-65

- குழு முகாமையாளர்
- நிதி ஆலோசகர்



தொடர்புகளுக்கு : 077 560 2579

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 14.08.1960 இறப்பு 11.02.2023

அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபையின் உறுப்பினர் **திரு.த.காருண்யன்** அவர்களின் தந்தையார்

**திரு.இராசசிங்கம் தவராசா**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு மீளாத் துயரடைகிறோம் அத்தோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா அம்பாள் பாதத்திற் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**உரும்பிராய்**
**பர்வதவர்த்தனி அம்மன் கோயில்**

(CR 39240 B)1-6

## வீடு வாடகைக்கு தேவை

காங்கேசன்துறை ரயில் நிலையத்திற்கு அருகில் வீடு வாடகைக்கு தேவை.

075 060 4312

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை, ரொட்டி வேலை, உணவு பரிமாறுபவர்(வெயிற்றர்) போன்றோர் உடனடியாக தேவை.(ஆண்கள் மட்டும்) தங்குமிட வசதி செய்து தரப்படும்.

077 343 3357, 077 271 8186
072 360 0885, 077 911 6807

## மரண அறிவித்தல்



**திரு. முடியப்பு றெமீடியஸ்**

சிரேஷ்ட சட்டத்தரணியும், யாழ். மாநகர சபை உறுப்பினருமான முடியப்பு றெமீடியஸ் அவர்கள் நேற்று (11.02.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீதிமன்றம் முன்பாக,**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**இராசசிங்கம் தவராசா (அப்பன் மெக்கானிக்)**



பிறப்பு : 14.08.1960 இறப்பு : 11.02.2023

மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசசிங்கம் தவராசா நேற்று (11.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் வனஜா அவர்களது அன்புக் கணவரும், காருண்யன், புனர்வஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர்களான இராசசிங்கம் பொற்கொடி தம்பதியரின் அன்பு மகனும், லோசினி ஆனந்த குமாரசாமி, அமரர் சிவ்ராசா, நந்தினி பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர்களான சிவப்பிரகாசம், இரத்தினபூபதியின் மூத்த மருமகனும், அமரர் வசந்தா தெய்வேந்திரகுமார், வரலட்சுமி பாலஸ்கந்தன், அருணன் (ஐயா, கொழும்புத்துறை ஐயனார் கோயில்), கோபிகா, கிருபாகரன் சத்தியப்பிரியா, ஆனந்தி கருணாகரன் (லண்டன்), அரிகரன் ஜீவனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் உரும்பிராய் மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 39240 A)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களிடமிருந்து எமது சுதந்திரப் போராட்டத்துக்கு கிடைத்த ஒத்துழைப்புக்காகவே 75 ஆவது சுதந்திரதினத்தை நாம் இம்முறை யாழ்ப்பாணத்தில் கொண்டாடத் தீர்மானித்தோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்திய அரசின், ஆயிரத்து 350 கோடி ரூபா நன்கொடையில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, 'கலாசார மத்திய நிலையம்' நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**நாணயத்தின் இருபக்கங்கள்**

ஒரு புறத்தில் இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் மறுபுறத்தில் விசேடமாக திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் நாம் இந்தியாவுடன் கலந்துரையாடி வருகின்றோம். வலு சக்தி தொடர்பிலும் நாம் பேச்சு நடத்தி வருகின்றோம். அதுபோலவே எமது பொருளாதார நெருக்கடியின்போது இந்த கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கும் இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பை நாம் பாராட்டுகின்றோம். இந்தக்கலாசார மையம் ஒரு பொதுவான மையமாகும். நம்மிடையேயுள்ள கலாசாரத்தை வேறு பிரிக்கமுடியாது என்று நான் எப்போதும் கூறுவேன். நாயணமொன்றின் ஒரு பக்கம் இலங்கை என்றால் மறுபக்கம் இந்தியாவாகும்.

**ஆறுமுகநாவலர்**

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஆரம்பித்த இந்து மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தை தொடர்ந்தே ஹிக்கடுவே சுமங்கள தேரர் பௌத்த மறுமலர்ச்சியை ஆரம்பித்தார். எனவே ஆறுமுக நாவலர் முன்னெடுத்த பணிகளில் இருந்து தான் எமது சிங்களத் தலைமைத்துவமும் உருவாகியது. பொன்னம்பலம் இராமநாதனுக்கு நன்றி கூறும் வகையிலேயே வெசாக் தினம் விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையர்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் தலைவர்பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். 1915 ஆம் ஆண்டு குழப்பங்கள் நிலவிய காலத்தில் எமது சிங்கள பௌத்த தலைவர்களை பாதுகாத்துக் கொடுத்தவர் பொன்னம்பலம் இராமநாதன். ஹென்றி பேதிரிஸின் வாழ்க்கையை பாதுகாக்குமாறு அவர் அப்போதைய ஆளுநருக்கு அறிவித்தார். அதற்கு பதிலாக ஹென்றி பேதிரிஸின் நிறைக்குச் சமனான தங்கத்தை தருவதாகக் கூறினார். எனினும், அது வெற்றியடையவில்லை.

பொன்னம்பலம் அருணாசலம் இலங்கை தேசிய சபையை உருவாக்கினார். தொழிற்சங்கங்களுக்கு தலைமைத்துவம் தாங்கினார். சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியிருந்த போதும் துரதிஷ்டவசமாக அவர் 1924 ஆம் ஆண்டு உயிரிழந்தார். அதிலிருந்து ஒரு வருடத்துக்குப் பின்னர் எப்.ஆர்.சேனாநாயக்க காலமானார். அவர் வாழ்ந்திருந்தால் இதை விடவும் வித்தியாசமானதொரு வரலாற்றை நாம் கண்டிருப்போம். சிங்களக் கலையை எமக்கும் உலகுக்கும் தெரியப்படுத்தியவர் ஆனந்தக் குமார சுவாமி. அவரின் காலத்திலேயே இது மேம்படுத்தப்பட்டது.

அருணாசலம் மஹாதேவாவும் இந்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தார். அதுபோலவே இந்து தர்மத்தை முன்னேற்றுவதற்கும் கொழும்பு சிவன் கோவிலை கட்டுவதற்கும் இங்கு கோவில்களை உருவாக்கவும் இந்தக் குடும்பம் உதவி செய்தது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் சிங்களம், தமிழ், பௌத்தம், இந்து ஆகிய பிரிவுகள் முன்னேற உதவி செய்தனர். இலங்கையர் சார்பாகவும் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்கள் சார்பாகவும் அந்தக்குடும்பத்துக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். அவர்களைப் போலவே வைத்தியலிங்கம் துரைசாமியையும் எம்மால் மறக்க முடியாது. சுதந்திரத்தைப் பெறுவதற்காக டி.எஸ். சேனாநாயக்கவுக்கு உதவிய அமைச்சர் சி. சுந்தரலிங்கம், அமைச்சர் சி.சிற்றம்பலம், அமைச்சர் நல்லையா ஆகியோரையும் நாம் இந்த இடத்தில் நினைவுகூர வேண்டும்.

நாம் ஜி.ஜி.பொன்னம்பலத்தையும் இங்கே நினைவுகூரவேண்டும். நாம் செல்வநாயகம் அவர்களையும் இங்கே நினைவுபடுத்தவேண்டும். அதுபோலவே அமைச்சர் எம்.திருச்செல்வம் அவர்களையும் நினைவுபடுத்துகின்றோம். இந்த தலைவர்களே ஏனைய தலைவர்களுடன் இணைந்து இலங்கையை உருவாக்குவதற்காக பணியாற்றினர். அதன் காரணமாகவே இப்பிரதேசத்தில், இந்த யாழ்ப்பாணத்தில் 75 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாட இந்த அரசாங்கம் தீர்மானித்தது.

**புதிய பயணம்**

நாம் தற்போது புதியதொரு பயணத்தை ஆரம்பிக்கவேண்டும். இலங்கையர்களாக ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். நல்லிணக்கம் தொடர்பில் நான் கடந்த 8 ஆம் திகதி அன்று பேசினேன். எனவே அதுபற்றி நான் இங்கே மீண்டும் பேசப் போவதில்லை. வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் நான் நேற்று (நேற்று முன்தினம்) பேசினேன். அதனால் அது குறித்தும் நான் இங்கே பேசப்போவதில்லை. ஆனால், கலாசாரம் தொடர்பில் நான் இங்கு பேசப்போகிறேன். இந்தத் தருணத்தில் அனைவரும் ஒன்றிணையவேண்டும். நல்லிணக்கம், அபிவிருத்தி, கலாசாரம் இவையே எமது கொள்கையாகும். யாழ்ப்பாணக் கலாசாரத்தில், தமிழ் கலாசாரத்தில் இலங்கையின் கலாசாரம் பின்னிப்பிணைந்துள்ளது.

இந்தத் தமிழ் கலாசாரம் இலங்கையிலிருந்து உருவான கலாசாரம் என்பதுடன் இது தமிழ் நாடு மற்றும் கேரளாவுடனும் தொடர்புபட்டதொரு கலாசாரம் ஆகும். இது விசேடமாக தஞ்சாவூரிலிருந்து வந்த பாண்டியன், விஜய நகர் இராஜ்ஜியங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. சந்திரபாகு ஆட்சியாளர் முதல் ஆரியச்சக்கரவர்த்தி அரசர்களின் காலம் வரை, சப்புமல் புவனேகபாகு அரசரின் காலம், சங்கிலி மன்னனின் காலம் ஆகியவற்றின்போது விசேட கலாசார பிணைப்புகள் இப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்டன. நல்லூரில் பெரும் கோயிலைக் கட்டுவித்தனர். அதுபோலவே சங்கிலிய மன்னரின் மாளிகை இருந்தது. அன்று நிர்மாணிக்கப்பட்ட மந்திரிகள், அமைச்சர்களின் வீடுகளைப் பார்த்தால் அந்த மாளிகைகள் எவ்வளவு விசாலமானவை என்பதை புரிந்துகொள்ளலாம்.

'சரஸ்வதி மஹால்' எனும் விசாலமான கலாசார மத்திய நிலையம் ஒன்று இங்கு இருந்தது. தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் அதற்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பழைய புத்தகங்கள் இருந்தன. வரலாறு குறித்தும் மருத்துவ விஞ்ஞானம் தொடர்பிலும் பயன்படுத்தப்பட்டு வந்த செகராசசேகரம் என்ற நூலையும் திருக்கேதீச்சரத்தையும் போர்த்துக்கீசிலிருந்து வந்தவர்கள் அழித்ததுடன் அவற்றை தீயிட்டும் கொளுத்தினர். அதனால் தான் மீகபுள்ளே ஆரச்சி போர்த்துக்கேயருக்கு எதிராக இரண்டு கலகங்களை முன்னெடுத்தார். அவரை மறந்துவிட வேண்டாம். மீண்டும் இந்தக்கலாசாரம் ஒல்லாந்து காலத்தில் இழக்கப்பட்டது. தேசவழமை சட்டமாக்கப்பட்டது. மீண்டும் வரலாறு புதுப்பிக்கப்பட்டது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இது மீண்டும் மேம்படுத்தப்பட்டது. 1840 இல் முதலாவது பத்திரிகை வெளியிடப்பட்டது. புத்தகங்கள் வெளிவந்தன. அதனூடாக மீண்டும் இலக்கியம் வளர்ந்தது. எனினும், போருடன் இவையனைத்தும் மீண்டும் அழிக்கப்பட்டன. நூலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. யாழ்.கோட்டை சிதைக்கப்பட்டது.

**கலாசாரப் பாதுகாப்பு**

போர் நடந்தாலும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் அதுபோலவே வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தோரும் இந்த தமிழ்க் கலையையும் கலாசாரத்தையும் பாதுகாத்தனர். இலங்கைக்கு உள்ளும் இலங்கைக்கு வெளியிலும் தற்போது அதற்கு புத்துயிர் கிடைத்துள்ளது.

நாம் இங்கே சம்பிரதாயமான தமிழ் இசையைக் கேட்கிறோம். திரைப்படங்கள் ஊடாக நாம் தமிழ்ப் பாடல்களைச் செவிமடுக்கின்றோம். அதுபோலவே ஏ.ஆர். ரஹ்மானின், 'சின்னச் சின்ன ஆசை' யின் இசையையும், யொஹானியின், 'மெனிக்கே மகே ஹித்தே' என்ற பாடலையும் ரசிக்கின்றோம். இவ்வாறு கலாசாரம் புதிய கலை வடிவம் பெற்றுள்ளது. அதனை நாம் முன்னேற்றவேண்டும். காலி இலக்கிய விழாவைப் போன்றே யாழ்ப்பாணத்திலும் நாம் ஓர் இலக்கிய விழாவை நடத்துவோம் என நான் கலாசார அமைச்சரிடம் கூறினேன்.

அதுபோலவே இங்கு நாம் புதிய கலையொன்றை முன்னேற்றுவோம். இலங்கைக் கலையின் ஒரு பகுதியாக இதனையும் உள்ளடக்குவோம். யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கியமான பகுதியாக அடையாளப்படுத்துவோம். இந்தப் பயணத்தை நாம் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டியுள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தூக்கி நிறுத்த வேண்டும். அப்போது இது எமது எல்லோரதும் நாடு ஆகும். இந்த இடம் தான் யாழ்ப்பாணத்தின் தமிழ் கலாசாரத்தின் மத்திய நிலையமாக இருக்கவேண்டும். அதனால் இந்திய அமைச்சரே, நாம் இந்த இடத்துக்கு 'சரஸ்வதி மஹால்' என பெயரிடுமாறு நான் வேண்டிக்கொண்டதாக பிரதமர் நரேந்திர மோடியிடம் கூறுங்கள். நாம் புதிய எதிர்பார்ப்புடன் முன்னேறிச் செல்வோம் - என்றார். (அ-ஒ-22)

## இந்தியாவை...

தெரிவித்தார். யாழ்ப்பாண கலாசார நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். கலாசார மையம் இன்று பொதுமக்களிடம் கையளிக்கப்படுகிறது. இந்த வரலாற்று நிகழ்வின் ஒரு பகுதியாக எனக்கும் இதில் கலந்து கொள்ள கிடைத்தமையை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். இது எங்கள் உறவில் முக்கியமான மைல் கல்லாக நினைவில் கொள்ளப்படும்.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த அற்புதமான வசதிகள் நிறைந்த கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நட்டார் என்பதை நான் இந்நேரத்தில் மகிழ்ச்சியுடன் நினைவு கூருகின்றேன். இத்திட்டத்தை நிறைவு செய்து பொது மக்களிடம் கையளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நிலையில் மக்களின் கலை மற்றும் கலாசாரத்தை மேம்படுத்த உதவும்.

திரையரங்குப் பாணியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கம், மிதக்கும் மேடை, பதினொரு மாடிகள் உள்ளிட்ட பல வசதிகளைக் கொண்ட இம்மையம் இலங்கை மக்கள் மீது இந்தியா கொண்டுள்ள உறுதிப்பாட்டின் நீடித்த அடையாளமாக இருக்கும். நான் இங்கே தங்கியிருந்த காலப்பகுதியில் வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம், விவசாயம் அதற்கும் அப்பாலென இந்தியாவின் நிலையான அர்ப்பணிப்பை அனைத்து மாகாணங்களிலும் தெட்டத் தெளிவாகக் கண்டேன். துரையப்பா மைதானத்தின் புனரமைப்பு மற்றும் புனிதமான திருக்கேதீச்சர ஆலயத்தின் மறுசீரமைப்பு ஆகிய இரண்டும் நான் நேரில் கண்ட உதாரணங்கள். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 'அயலவர்களுக்கு முன்னுரிமை' என்ற கொள்கைக்கமையவே இந்த அர்ப்பணிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தக்கொள்கையின் கீழ் இலங்கை ஒரு முக்கியமான இடத்தைப் பெறுவது இயற்கையானது.

2022 ஆம் ஆண்டு இலங்கை மக்களுக்கு இந்தியா வழங்கிய 4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி மற்றும் பொருளாதார உதவிகளை விட பெரிய விடயம் எதுவும் இல்லை. இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் வகையில் சர்வதேசநாணயநிதியத்துக்கு எழுத்து மூலமான நிதி உத்தரவாதத்தை வழங்கிய முதல் நாடு இந்தியா என்பதில் பெருமை கொள்கிறோம். இதுபோன்றே, இலங்கையிலுள்ள எமது நண்பர்களுக்கு இந்தியா பல தடவைகள் துணை நின்றுள்ளது. இது மக்களுக்கிடையிலான உறவுகளையும் கலாசார உறவுகளையும் மென்மேலும் வலுவூட்டுவதாக அமையும்.

இரு நாடுகளும் கடல் எல்லைகளைப் பகிர்ந்து கொண்டாலும் இந்தியாவின் தெற்குப் பகுதியிலிருந்து இலங்கையின் வடக்குக்கு பயணிப்பதில் சிரமம் இருந்தது. இரு நாடுகளதும் முயற்சியால் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நேரடி விமான சேவையை நாம் மீண்டும் தொடங்கினோம். இது இரு நாடுகளுக்கும் இடையிலான மக்கள், வர்த்தகம், சுற்றுலா மற்றும் கலாசார நிகழ்வுகளை மேம்படுத்துவதற்கான உந்துசக்தியாக அமையும். உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பது போன்றே படகுச் சேவையை ஆரம்பிக்கவும் நாம் பணியாற்றி வருகின்றோம்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலின் பேரில் வட மாகாணத்திலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 100 பிள்ளைகளுக்கு இந்திய அரசின் சார்பில் புலமைப் பரிசில் வழங்கும் திட்டமொன்று அறிமுகம் செய்யப்படும்.

2047 ஆம் ஆண்டில் இந்தியா தனது 100 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடவுள்ளது. அதனை நோக்கிய பயணத்தை இந்தியா ஆரம்பித்துள்ளது. இலங்கையும் அதே குறிக்கோளுடன் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. எனவே இந்த அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் இலங்கை, இந்தியாவை அரவணைத்துச் செல்லும் என நான் நம்புகின்றேன்' - என்றார். (அ-ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போராட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று மதியம் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். கலகமடக்கும் பொலிஸாரும் களமிறக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேலதிகமாக சிறப்பு அதிரடிப்படையினரும் கொட்டன்களுடன் அங்கு காணப்பட்டனர். பி.ப. 3 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவை வாசித்துக் காட்டிய போதும், அதில் தமது பெயர்கள் இல்லை எனத் தெரிவித்து அவர்கள் போராடினர். அவர்களைத் தடுக்க பொலிஸார் முனைப்புக் காட்டிக்கொண்டிருந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி க.சுகாஸ் ஆகியோர் அங்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கும் நீதிமன்றத் தடையுத்தரவை ஒலிபெருக்கி ஊடாக பொலிஸார் வாசித்துக் காட்டினர்.

ஆனாலும் போராட்டத்தை நிறுத்தாமல் அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்தனர். பொலிஸார் பலப்பிரயோகம் மேற்கொண்டபோதும் அதையும் மீறி கட்டுக்கடங்காமல் போராட்டம் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் பொலிஸார் தடியடி நடத்தி ஒவ்வொருவராகக் குறித்த நேர இடைவெளியில் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றினர். இதன்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போராட்டக்காரர்களை கீழ்த்தரமாக நடத்திய பொலிஸார் அவர்களின் சட்டைகளையும் கிழித்தனர்.

இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி க.சுகாஸ் உள்ளிட்ட 18 பேரை கைது செய்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர்.



யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் நேற்று நேரில் சந்தித்து விசாரணைகளை முன்னெடுத்தார். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். கைதுக்கான காரணம், நீதிமன்றில் எப்போது முற்படுத்தப்படுவார்கள் என்பது தொடர்பாகவும் அவர் பொலிஸாரிடம் கேட்டறிந்தார். நேற்றிரவு 10 மணியளவில் சட்டமருத்துவ அதிகாரியிடம் 18 பேரும் முற்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-ஓ-5-26)

## ரணிலுக்கு...



கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், சிவாஜிலிங்கம் அணியினர் என மூன்று இடங்களில் வெவ்வேறு நேரங்களில் போராட்டத்தை - தாக்குதலை - தொடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் முன்பாக மதியமளவிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக பி.ப. 3 மணியளவிலும், சிவாஜிலிங்கம் அணியினர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி சிலை முன்பாக மாலை 4 மணியளவிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ஓ-5-26)

## இந்தியத்...

மாநகர மேயர் இ.ஆர்னோல்ட் கலந்துகொண்டார். இருப்பினும் அவருக்கு நிகழ்வில் உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாண கலாசார மண்டபம், யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டது. யாழ். மாநகர சபை ஊடாகவே அந்த மண்டபம் நிர்வகிக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் அது நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், கொழும்பு அரசு அதனை கையகப்படுத்த முயற்சிகளை முன்னெடுத்தது. அதன் ஓர் அங்கமாக இந்த மண்டபத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வைக் கூட யாழ். மாநகரசபை ஊடாக முன்னெடுக்காமல் கொழும்பு அரசின் புத்தசாசன அமைச்சே ஒழுங்கமைத்தது. அத்துடன் யாழ். மாநகரசபைக்கு உரிய கௌரவமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்துவதற்காக மாநகர முதல்வரான ஆர்னோல்ட் பெயரிடப்பட்டிருந்தபோதும் அதுவும் இறுதி நேரத்தில் மாற்றப்பட்டிருந்தது. இதனால், ஜனாதிபதி ரணிலுடன் பேசி நன்றியுரைக்கான வாய்ப்பு வழங்கப்பட்டால் மட்டுமே ஆர்னோல்ட் நிகழ்வில் கலந்துகொள்வார் என்ற நிலைப்பாடு நேற்றுமுன்தினம் மாலை வரையில் இருந்தது. இருப்பினும் இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நகரிலுள்ள ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இரவு விருந்துபசாரம் இடம்பெற்றது. இந்திய இணை அமைச்சர் எல்.வேல்முருகன், பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் தமிழ் அரசியல்வாதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

விருந்துபசாரத்தின்போது இந்திய அதிகாரிகளால், யாழ். மேயர் இ.ஆர்னோல்ட் கலந்துகொள்ளவேண்டியதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் நேற்றைய நிகழ்வில் பங்கேற்றார். (அ-ஓ-5)

## பிரதமர்...

தினேஷ் குணவர்த்தன கலந்துகொள்ளவில்லை. அவரது பங்கேற்புடனேயே யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் அனைத்து நிகழ்வுகளும் இடம்பெறும் என்று அழைப்பிதழ்களில் குறிப்பிட்டிருந்தாலும் அவர் கலந்துகொள்ளவில்லை.

பொதுவில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் மாத்திரமே பிரதமர் பங்கேற்பார் என்றும் ஏனைய நிகழ்வுகளில் அவர் ஜனாதிபதியுடன் கலந்துகொள்வதில்லை எனவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஓ-5)

## ‘ராகு காலத்தில்...

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான நிலத்தில் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாண கலாசார நிலையத்துக்கான அடிக்கல், இந்தியப் பிரதமர் மோடியால் நடப்பட்டது. கலாசார நிலையம் கடந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. முன்னைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் காலத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பில் நிற்கும் சமயத்தில், கலாசார நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் கலாசார நிலையத்தில் இந்திய சுதந்திரநாள் நிகழ்வு மற்றும் குடியரசுநாள் நிகழ்வு என்பன இடம்பெற்றன.

இந்த நிலையில் இந்த கலாசார நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உத்தியோகபூர்வமாக உரித்தாக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், இந்திய இணை அமைச்சர் எல்.வேல்முருகன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால்பாக்லே, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், இ.அங்கஜன், காதர் மஸ்தான், யாழ். மேயர் இ.ஆர்னோல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலாசார நடனங்கள் என்பன நடைபெற்றன. வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதி ரணில், இந்திய இணை அமைச்சர் ஆகியோரின் உரைகளும் நடைபெற்றன.

தமிழ் மக்கள் பொதுவில் சுப நேரங்களைப் பார்த்தே திறப்பு விழாக்கள் உள்ளிட்ட மங்கல நிகழ்வுகள் முன்னெடுப்பது வழமை. நேற்றைய நாள் காலை 9.34 தொடக்கம் 11.4 வரையில் ராகு காலமாகும். அந்த நேரத்தில் மங்கல காரியங்கள் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆனால், அவ்வாறான ராகு காலத்திலேயே இந்தக் கலாசார மண்டபம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)






Australian Aid

குறும் காணொளி உருவாக்கப் போட்டி

◆ வயதெல்லை : 18 முதல் 45 வரை
◆ போட்டி முடிவுத் திகதி - 25 பெப்பிரவரி 2023
◆ காணொளியின் கால அளவு: 30 - 60 செக்கன்கள்
◆ உள்ளடக்கம்
தெரிவு செய்யப்பட்ட ஒரு உள்ளூர்த் தாவரத்திலிருந்து ஆக்கப்படும் உணவு. அதன் ஊட்டச்சத்துப் பெறுமானம்.
◆ பரிசுகள்
- முதன்மைப் பரிசு : ரூபா 15,000
- சிறப்புப் பரிசுகள் (2) : ரூபா 7,500
◆ போட்டி விதிகள்
- இணையத்தில் முன்னர் வெளிவராத காணொளியாக அமைதல்.
- கையடக்க தொலைபேசியில் காணொளிகளைப் படமாக்கலாம்.
- ஒருவர் பல்வேறு காணொளிகளைப் போட்டிக்கு அனுப்பலாம்.
- ஒரு காணொளி ஒரு தாவரத்தினை மையப்படுத்தியே அமைதல்

காணொளிகளை அனுப்புபவரின் பெயர், தொலைபேசி இலக்கத்துடன் md@suvadi.org எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும். மேலதிக விபரங்களுக்கு 077 425 2442/ 021 222 5529 அழைக்கவும்.

சுவடி நிறுவகம், எழுதிரள்,
209, பலாலி வீதி, கோண்டாவில்.
www.suvadi.net
suvadi_shoutouts @suvadi/shorts
(cs.49063) (2.6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

மானிப்பாய் நவாலியில் வீட்டுவேலைகள் செய்வதற்கு 35-45 வயதிற்கு இடைப்பட்ட நேர்மையாக வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 0777 888 325

## மணமகன் தேவை

1985 இல் பிறந்த அரச உத்தியோகத் திலுள்ள விஸ்வகுல திருவோணம். 14 பாவமுடைய மணமகளுக்குப் பொருத்த மான மணமகன் எதிர்பார்க்கப்படுகின்றது.

077 385 9450 (CS/23242) 4,6)

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை.(பெண்) சம்பளம்-30,000

தொடர்பு: 076 306 3306

## மெசின் கல் அடிக்கும் வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் யாட் ஒன்றிற்கு மெசின் கொங்கிறீட் கல் அடிக்கும் வேலையாள் தேவை. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 9400 963

## வாடகைக்குண்டு

மயிலிட்டிச் சந்தியில் கடைகள் வாடகைக்குண்டு.

077 707 5390

## வேலைக்கு ஆட்கள் தேவை

பூட் சிற்றிக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

077 809 1094 (CS/23449) 4,6)

## ஆள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு வெல்டிங் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள ஆண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

076 826 7703

## வாடகைக்குண்டு

கொழும்பு கொட்டாஞ்சேனையில் சகல நவீன வசதிகளுடன் நாள். கிழமை அடிப்படையில் வீடு வாடகைக்கு உண்டு. (சகல சுபகாரியங்களுக்கும் உகந்தது)

077 345 7745/ 076 641 1360

## வேலைக்கு ஆட்கள் தேவை

**New Tone Electrical**

169, சேர் பொன். இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. சுயவிபரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.

## வாடகைக்கு

அரியாலை, நெடுங்குளம் றோட், அருளம்பலம் லேனில் புதிய மாடி வீட்டின் மேல் பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. இடைத் தரகர் அனுமதி இல்லை. நவீன குளியலறையுடன் கூடியது.

074 216 8717 (CR 25434) (3/6)
074 223 6815

## கடை வாடகைக்குத் தேவை

பேக்கறி சார்ந்த உணவு உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு சாவகச்சேரி நகரத்திற்குள் கடை ஒன்று தேவைப்படுகின்றது.

077 144 5701

## வீட்டு உதவியாளர் தேவை

வீட்டு வேலைகள் மற்றும் குழந்தை பராமரிப்புக்கு உதவக்கூடிய வீட்டு பணிப்பெண் தேவை.

077 98 66 032

## வீடு வாடகைக்கு தேவை

வவுனியா நகரை அண்மித்த பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 203 5908

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 317 4416,077 501 3103

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் போட்டோ கொப்பி கடைக்கு வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

076 832 3682

## காணி விற்பனைக்கு

### உடுவில்

உடுவில் டச் வீதியில், உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து 500 m தொலைவில்

வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு 8 பரப்பு

0776320376

தரகர் தேவையில்லை

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
UK-1450
Australia-2800
Canada Normal-1200 மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

தொடர்புகளுக்கு : 0777554528 321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு மிக அருகில் 1.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- பலாலி வீதியில் இருந்து 50m
- திருநெல்வேலிச் சந்திக்கு மிக அருகில்

**50m Away from Palaly Road, Near to Sampath Bank, Well Educated and respectable neighborhood)**

Contact - 077 584 7895

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் முன்னணி நிறுவனம் ஒன்றின் யாழ் மாவட்டத்துக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

- Business Executive
- Business Manager
- Office Admin
- Sales Staff

கவர்ச்சிகரமான அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக போனஸ் கொடுப்பனவு என்பன வழங்கப்படும். உங்கள் சுயவிபரக் கோவையை எமக்கு whats app செய்யுங்கள்.

**Send Your CV To Whatsapp :- +94 740 519839**

மேலதிக விபரங்களுக்கு :- +94 7788 06202

## மின் தடைகளுக்கு உடனடித் தீர்வு

இல்லம், தொழிலகங்கள், ஆலயங்களுக்கான மின் தடை மற்றும் மின் கட்டணங்களைக் குறைப்பதற்கு INVERTER BATTERY SOLAR வசதிகள் மற்றும் CCTV CAMERA குறைந்த செலவில் பொருத்தித்தரப்படும். மற்றும் பழுது பார்க்கப்படும்.

111A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல:- 077 555 5100 (CS/ 48692) 4,6

## வாடகைக்கு!



### கடை

காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள், வணிக நிறுவனங்களுக்கு ஏற்றதாகும்.

### விடுதி அறைகள்

வெளிமாவட்ட பயணிகள், சுற்றுலா பயணிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்றதாகும்.

No.22/1 Ponnalai Road, Manipay. T.P.:076 212 9031

## கணக்காளர் (Accountant) தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் உற்பத்தி நிறுவனத்துக்கு முன்னனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை.

**தகைமைகள்**

- கணக்காளர் / கணக்காய்வாளர் துறையில் குறைந்தது 3 வருட அனுபவம்.
- ACCA / CIMA / ICASL ஆகிய கற்கைகளில் பகுதி தகைமை அல்லது AAT / HND ஆகிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- கணக்கீட்டு மென்பொருளில் (Accounting Softwares) முன் அனுபவம்.

மேற்குறித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகள் உங்களது சுய விபரக் கோவையை (CV) கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு **20.02.2023** இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல் : info.zandramesh@gmail.com

தொலைபேசி இல :- 077 715 9640 (CS 49052)4-6

## குத்தகைக்கு / வாடகைக்கு

யாழ்.குருநகர் பற்றிக்ஸ் வீதியில் 800 சதுரஅடி கொண்ட ஃபூட் சிற்றி அனைத்துப் பொருட்களுடனும் வாடகைக்கு / குத்தகைக்கு விடப்படும்.

076 855 6300
077 053 5121

## முன்பள்ளி ஆசிரியர் நியமனம்

மானிப்பாயில் அமைந்துள்ள பிரபல முன்பள்ளி ஒன்றுக்குப் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்த ஆசிரியர் தேவை.

**கல்வித் தகைமை :**

- க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.
- க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது பிரிவில் பிரதான 3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

**மேலதிக தகைமைகள்:**

- 3 வருடங்கள் முன்பள்ளி ஆசிரியர் சேவையில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.
- ஆங்கிலத்தில் உரையாடும் திறன் கொண்டிருத்தல்.

**Salary நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்**

076 212 9031



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

கருணை பொங்கும் உள்ளம்
அது கடவுள் வாழும் இல்லம்
கருணை மறந்தே வாழ்கின்றார்
கடவுளைத்தேடி அலைகின்றார்
காலம் ஒரு நாள் மாறும் – நம்
கவலைகள் யாவும் தீரும் - கண்ணதாசன்


# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 தை 29 ஞாயிற்றுக்கிழமை (12.02.2023) சிகரம் : 136


அ.நிக்ஸன்



# பிக்குமாரின் இந்திய எதிர்ப்பும் இலங்கை ஒற்றையாட்சியும்

மாற்றுக் கருத்துக்கள் என்பதைச் சமாதானப் பேச்சுக் காலத்தில் ஈழத்தமிழர்கள் மத்தியில் புகுத்திய அமெரிக்க - இந்திய அரசுகள், 2009 க்குப் பின்னரான சூழலில் நல்லிணக்கம், நடைமுறைச் சாத்தியமானதைச் சிந்தித்தல், மனித உரிமைப் பாதுகாப்பு போன்ற சொல்லாடல்களைப் புகுத்தி தமிழ்த்தேசியக் கோட்பாட்டைச் சிதைக்க முற்பட்டு வருகின்றன என்பது பட்டவர்த்தனம். தமிழ்த்தேசியக் கட்சிகளும், மக்களில் சிலரும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் பலரும் அந்தக் கருத்துக்களை அதிகமாகவே உள்வாங்கிவிட்டனர். இருந்தாலும் அந்த அரசியல் பின்னணியின் ஆபத்துக்களை அவர்கள் அறியாதவர்களும் அல்லர். ஆனால் சிங்கள மக்களிடம் மேற்படி சொல்லாடல்களை அமெரிக்க - இந்திய அரசுகளின் அரசசார்பற்ற நிறுவனங்களினால் விற்பனை செய்யமுடியவில்லை. பதின்மூன்றுக்கு எதிரான சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த குருமாரின் கருத்து வெளிப்பாடுகள் அதனை எடுத்துக் கூறுகின்றன. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது கொழும்பில் இந்தியத் தூதுவராகப் பதவி வகித்திருந்த ஜே.என். டிக்சிற், 1998 இல் எழுதிய அசைன்மன்ற் கொழும்பு (Assignment Colombo) என்ற நூலில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசியல் பிடிவாதம் பற்றி விபரித்திருக்கிறார். குறிப்பாக வடக்கு-கிழக்குத் தாயகப் பிரதேசம் (North East Tamil Homeland) என்று ஒப்பந்தத்தில் குறிப்பிட ஜே.ஆர் விரும்பவில்லை என்றும் இதனால் வரலாற்று வாழ்விடங்கள் (Historic Habitats) என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகவும் விபரிக்கிறார்.

இதனூடாகப் புரிந்துகொள்ளக் கூடியது என்னவென்றால், பௌத்த பிக்குமாரைத் திருப்திப்படுத்தாமல் இலங்கைத் தீவில் எந்தவொரு அரசியல் தீர்வும் சாத்தியம் இல்லை என்பதே. பௌத்த பிக்குமாரும் சிங்கள மக்களும் எப்போதுமே இந்தியாவை விரும்பியவர்கள் அல்லர் 'பதின்மூன்றுக்கு' எதிராகக் கொழும்பில் நடைபெற்ற பௌத்த குருமாரின் போராட்டம் இந்திய எதிர்ப்பின் உண்மையைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சிங்களவர்கள் சீனாவுக்கு எதி

## சிங்களவர்களிடம் விற்பனை செய்ய முடியாத நல்லிணக்கம்

ராக ஆர்ப்பாட்டங்களைச் செய்தமை குறைவு என்பதையும், இந்தியாவுக்கு எதிராகச் செய்த போராட்டங்கள் அதிகம் என்பதையும் காணமுடியும். சிங்கள ,ஆங்கில ஊடகங்களிலும் இந்திய எதிர்ப்பை அவதானிக்க முடியும்.

ஆனால் இந்தியா எப்போதுமே, அதாவது இந்திரா காந்தி காலத்தில் இருந்து சிங்கள ஆட்சியாளர்களையே திருப்திப்படுத்தியே வருகின்றது. 'பதின்மூன்றுக்கு' எதிராகப் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற பௌத்த பிக்குமாரின் போராட்டம் இலங்கை அரசாங்கத்தை அல்ல, இந்தியாவையே கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றது. இதனை இன்னமும் ஏன் இந்தியா புரிந்துகொள்ளவில்லை ? என்பதே ஈழத்தமிழர்களின் கேள்வியும் கவலையும். ராஜீவ் காந்தி படுகொலை விவகாரத்தை மையப்படுத்தி 1991 இல் இருந்து இன்றுவரை ஈழத்தமிழர்களை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டேயிருக்கும் இந்தியா, 1987 இல் கொழும்பில் ராஜீவ் காந்தியை அணிவகுப்பில் வைத்து இலங்கை கடற்படைச் சிப்பாய் ஒருவர் தாக்கி அவமானப்படுத்தியதை மறந்துவிட்டது.

குறித்த கடற்படைச் சிப்பாய் விடுதலை செய்யப்பட்ட பின்னர் இந்தியாவுக்கு எதிராக மேற்கொண்ட பிரசாரங்களைக் கூட இந்தியா கண்டுகொள்ளவேயில்லை. ஆனால் இன்றுவரை இந்தியா ஈழத்தமிழர்கள் பக்கம் இல்லை. வடக்கு - கிழக்கில் இந்தியா மேற்கொண்டு வரும் மனிதாபிமான உதவிகள் மற்றும் அபிவிருத்திக்கான உதவிகளைக்கூட புதுடில்லி இலங்கை மக்களுக்கானது என்றே கூறுகின்றது. பொருளாதார நெருக்கடியின்போது தமிழ் நாடு அரசு, ஈழத்தமிழர்கள் - மலையகத் தமிழர்கள் என்று குறிப்பிட்டு வழங்க முன்வந்த நிவாரண உதவிகளைக்கூடப் பின்னர் இலங்கை மக்களுக்கான உதவி என்றே இந்தியா மடைமாற்றியது. ஆனால் அரபுநாடுகள் வழங்கும் உதவிகளை முஸ்லிம் மக்களுக்கென்று கூறியே வழங்குகின்றன.

ஆகவே ஜே.என்.டிக்சிற்றின் நூலில் கூறப்பட்டுள்ள ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பிடிவாதம் பற்றிய கருத்து முழுச் சிங்கள மக்களுக்கும் உரியது என்பதை 2009க்குப் பின்னரான இந்திய எதிர்ப்புகள் புடம்போட்டுக் காண்பிக்கின்றன. மாகாணசபையும் அதற்குரிய'பதின்மூன்றாவது' திருத்தச் சட்டமும் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரமே உரியவை. ஆனால் ஜே.ஆரின் பிடிவாதத்தினால் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தவே இலங்கைத்தீவு முழுவதும் ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மாகாணசபைகள் முறை அமுல்படுத்தப்பட்டதை தமிழ்த் தலைவர்களிடம் டிக்சிற் அன்று சுட்டிக்காட்டியிருந்தார். நாற்பது ஆண்டுகள் ஈழத்தமிழர்கள் போராடியது சிங்கள மக்களுக்கு மாகாண சபைகளைப் பெற்றுக் கொடுக்கவா? என்று விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அப்போது பகிரங்கமாக வேதனையோடு கேள்வி எழுப்பியிருந்தார். ஆகவே சிங்கள மக்களின் குறிப்பாக பௌத்த குருமாரின் மன நிலை என்பது இன்றுவரை மாறாத ஒன்று. ஆனாலும் இந்தியா இன்றுவரையும் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாகக் கொழும்புடனேயே நேரடியாக உறவைப் பேணி வருகின்றது. அதாவது 'பதின்மூன்றை' அமுல்படுத்துங்கள் என்பதுதான் இந்தியாவின் பேச்சும் நம்பிக்கையும். இதனையே இந்தியா தமிழ்த்தேசியக் கட்சிகளிடமும் திணித்து வருகின்றது. வடக்கு-கிழக்கு இணைந்த முழுமையான சுயாட்சிக் கட்டமைப்புத்தான் நிரந்தரத் தீர்வு என்று கோருகின்ற தமிழ்த் தரப்பு நியாயங்களை இந்தியா செவிமடுப்பதேயில்லை. பௌத்த தேசியவாதத்துக்குள் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பு. இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் பௌத்ததேசியவாதம். இதுதான் இலங்கைத்தீவின் அரசியல் விதி என்பது இந்தியாவுக்குப் புரியாததல்ல. இந்த இரண்டும் ஒன்றுக்குள் ஒன்றாகக் குடிகொண்டிருக்கும் நிலையில், இலங்கைத்தீவில் அரசியல் நிம்மதிக்கும் இடமில்லை. இந்த உண்மையைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள விரும்புவதாக இல்லை என்பது வேறு. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் தமக்கு ஆதரவு தருவார்கள் என்று இந்தியா இன்றுவரை நம்புவதுதான் வேடிக்கை.

அரசியல் யாப்பும், பௌத்த தேசியமும் ஒன்றுக்குள் ஒன்று குடிகொண்டிருப்பதை ஜே.வி.பி. உள்ளிட்ட பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் பாதுகாக்கின்றன. சிங்கள ஊடகங்கள் அந்தப் பாதுகாப்புக்கு வழி சொல்லிக் கொடுக்கின்றன. சிங்களத்தை மையப்படுத்திய ஆங்கில ஊடகங்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஏற்ப அதனைக் கொஞ்சம் இராஜதந்திரமாகக் கையாண்டு, இலங்கை ஒற்றையாட்சியை ஜனநாயகப் பன்முகத் தன்மை என்று கூறிப் பாதுகாக்கின்றன. 'பதின்மூன்றை' நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற தொனியைக் கொஞ்சம் நியாயப்படுத்தி அமெரிக்க - இந்திய அரசுகளை இந்த ஆங்கில ஊடகங்கள் சமாளிக்கின்றன. அதேநேரம் பெரும்பகுதி பௌத்த பிக்குகள் 'பதின்மூன்றை' எதிர்க்கக் குறிப்பிட்ட சில பௌத்த பிக்குகள் 'பதின்மூன்றை' நியாயப்படுத்திப் பேசுகின்ற அரசியல் தந்திரமும் உண்டு. 2004 இல் சுனாமிப் பொதுக் கட்டமைப்புக்கு எதிராகக் கொழும்பில் பிக்குகள் போராட்டம் செய்த அதேநேரம், பொதுக் கட்டமைப்பு அவசியம் என்று வலியுறுத்தித் தமிழர்களுக்காக மற்றுமொரு பகுதி பௌத்த பிக்குமார் குரல் கொடுத்திருந்தனர். இந்தத் தந்திரத்தின் அரசியல் உள்நோக்கம் என்னவென்றால் இலங்கைத்தீவில், எது நடந்தாலும் பௌத்த பிக்குகள் சம்மதித்து அனைத்தும் நடக்கவேண்டும் என்பதே. 1920 இல் இலங்கைத்தேசிய இயக்கம் பிளவுபட்ட காலப் பகுதியில் இருந்து இன்றுவரை இந்தத் தந்திரத்தைச் சிங்களவர்கள் நுட்பமாகப் பயன்படுத்தி வருகின்றனர். பௌத்தபிக்குகள் வேவ்வேறாகப் பிரிந்து நின்று எதிர்ப்பதும் ஆதரிப்பதும் என்ற தந்திரத்தைப் பின்பற்றினாலும், அதற்குள்ளும் ஓர் அடிப்படை ஒற்றுமை உண்டு.

இலங்கை ஒற்றையாட்சியையும் அரசியல் யாப்பில் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை என்பதையும் விட்டுக் கொடுப்பதில்லை என்பதே இந்த அடிப்படை ஒற்றுமை. 'பதின்மூன்றை' நியாயப்படுத்துகின்ற பௌத்த பிக்குமார், 'பதின்மூன்றை' எதிர்க்கும் பௌத்த பிக்குகளுக்கு ஆதரவு. அதாவது இந்த இரண்டு தரப்பும் இலங்கை ஒற்றையாட்சியைப் பாதுகாக்கின்றன. ஆயினும் அரசியல் யாப்பும் பௌத்த தேசியமும் ஒன்றுக்குள் ஒன்று நீண்டகாலத்துக்குத் தொடர்ந்து குடிகொண்டிருக்க வாய்ப்பில்லை. உடைந்து சிதைவதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாக உண்டு. ஏனெனில் சிங்கள மன்னர்கள் தங்களுக்குள் தாங்களே அடிபட்டுக் காட்டிக் கொடுத்த கதைகள் பௌத்த வரலாற்றுப் பாடநூல்களில் உண்டு. ஆனால் தங்களைத் தாங்களே முற்போக்குவாதிகள் என்றும் மிதவாதிகள் எனவும் கூறிக் கொண்டும் திரியும் ஈழத்தமிழர்களில் சிலர், உடனடியாக 'முண்டு' கொடுத்து பௌத்த தேசியம் உடைவதைக் காப்பாற்றி விடுவர்கள் என்பதுதான் இங்கே பெரும் துயரம். அவ்வளவு அரசியல் மனிதாபிமானம் உள்ளவர்கள் தமிழ் முற்போக்காளர்கள். மிதவாதம் என்று கூறுகின்ற தமிழ் அரசியல்வாதிகளிலும் அப்படிக் காப்பாற்றுகின்ற அரசியல் வருத்தம் உண்டு.

**உதாரணம்-01-** சரத்பொன்சேகாவுக்கு 2010 இல் வெள்ளையடித்து மக்களையும் வாக்களிக்கத் தூண்டினர்.

**உதாரணம்-02-** மைத்திரிபால சிறிசேன்வுக்கு 2015 இல் வெள்ளையடித்து வாக்களிக்க வைத்தனர்.

**உதாரணம்-03-** 2015 இல் நடந்த இலங்கைச் சுதந்திரதின வைபவத்தில் பங்குபற்றினர்.

**உதாரணம்-04-** ரணிலின் ஜனநாயக உரிமைக்காக 2018 இல் உயர்நீதிமன்றம் சென்றனர். அதாவது 2015 இல் வெள்ளையடித்த மைத்திரிக்கு எதிராக வழக்குத் தொடுத்தனர்.

**உதாரணம்-05-** சஜித் பிரேமதாஸவை 2020 இல் நியாயப்படுத்தினர்.

**உதாரணம்-06-** கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக 2022 இல் நடந்த காலிமுகத்திடல் போராட்டத்தைச் சிங்கள மக்களின் மன மாற்றம் என்று வர்ணித்தனர்.

**உதாரணம் 07-** சந்திரிகாவைச் சிலர் ஜனநாயக வாதி என்று 2009 க்குப் பின்னர் நியாயப்படுத்தி வருகின்றனர்.

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பிச்சையெடுக்கச் சுதந்திரம்?

நிலாந்தன்

நான் பேசப்போவது எமக்கு கிடைத்த சுதந்திரத்தைப் பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப்பெறுவது பற்றியே நான் பேசப்போகிறேன்இப்படிப் பேசியிருப்பவர் நாட்டின் ஜனாதிபதி. நடந்து முடிந்த சுதந்திர தின விழாவில் அவர் ஆற்றிய உரை அது. நாங்கள் சுதந்திரத்தை இழந்துவிட்டோம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். இதை எப்பொழுது கூறுகிறார்? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகளின் பின் கூறுகிறார். ஆயின்,2009 ஆம் ஆண்டு ராஜபக்ச சகோதரர்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா?

ராஜபக்சக்கள் யாருக்காக நாட்டை மீட்டுக் கொடுத்தார்களோ, அந்த மக்களே இப்பொழுது நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.அதைத் தனது உரையில் ரணில் குறிப்பிடுகிறார்.அதன்பின் நான்கு நாட்கள் கழித்து நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையிலும் அவர் அதைக் குறிப்பிடுகிறார், "நாட்டை விட்டுப் போகாதீர்கள்" என்று. அண்மையில் முகநூலில் ஒரு மூத்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளரின் மகன் ஒரு பதிவைப் போட்டிருந்தார்.தான் சந்திக்கும் பெரும்பாலான நண்பர்கள் எப்படி நாட்டை விட்டு வெளியேறலாம் என்பதைப் பற்றியே கதைக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் வசித்த ஓர் ஊடகவியலாளர் சொன்னார்... 'அக்காலகட்டத்தில் ஒன்றில் சாலை கடற்கரையை அல்லது வங்கக் கடலைப் பார்த்தபடி எந்த வழியால் தப்பிப் போகலாம்? எப்பொழுது தப்பிப் போகலாம்? என்று சிந்தித்ததை ஒத்த நிலைமை இது.அக்காலகட்டத்தில் பெரும்பாலான பொது மக்கள் தப்பிப்போவதைப் பற்றியே சிந்தித்தார்கள்.13 ஆண்டுகளின் பின் இப்பொழுது நாடு முழுவதும் அந்த நிலைமை வந்திருக்கிறது.'

ஆயின், ராஜபக்சக்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா? அதைச் சாப்பிட முடியாதா?அதை வைத்து உழைக்க முடியாதா?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ராஜபக்சக்கள் தோற்கடித்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எந்தெந்த நாடுகளிடம் கையேந்தினார்களோ அந்த நாடுகளிடம் , நாட்டில் ஏதோ ஒரு பகுதியை அல்லது ஏதோ ஒரு வளத்தை இழந்து விட்டார்கள். சீன விரிவாக்கம், அதற்கு எதிரான இந்தோ - பசுபிக் வியூகம், குவாட் வியூகம் என்பதற்குள் இந்தச்சிறிய நாடு சிக்கிவிட்டது. நாட்டின் துறைமுகங்களில் ஒன்றாகிய அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனா 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எழுதிப் பெற்றுக் கொண்டு விட்டது. கொழும்புத் துறைமுகத்துக்கு அருகே சீனா ஒரு துறைமுகப் பட்டினத்தைக் கட்டியெழுப்பிவிட்டது. அத்துறைமுகப் பட்டினத்துக்கு நாட்டில் உள்ள மாகாணசபைகளை விடவும் சில அதிகாரங்கள் விசேஷமாகக் கொடுக்கப்பட்டிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. தன் சொந்த மக்களுக்கு கொடுக்கத் தயாரற்ற அதிகாரங்களை 'பிறத்தியாருக்கு' கொடுக்கிறது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு. ஒரு காலம் தேரவாத சிங்கள பௌத்தத்தின் மரபுரிமைச் சின்னங்களே இந்த நாட்டின் அடையாளங்களாக இருந்தன. ஆனால் இப்பொழுது சீனா கட்டிக் கொடுத்த தாமரைக் கோபுரந்தான் நாட்டின் நவீன அடையாளமாக மாறியிருக்கிறது. சீன விரிவாக்கத்தின் பலனாக இலங்கைத் தீவின் வரைபடமே மாறிவிட்டது.

சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா தனது நிலைகளை இந்தச்சிறிய தீவுக்குள் பலப்படுத்த முற்படுகின்றது.குறிப்பாக வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறிவிட்டது. அது மட்டுமல்ல போரை வென்ற ராஜபக்சக்களின் சுதந்திரம் பெருமளவுக்கு நாட்டுக்குள்ளேயே சுருங்கத் தொடங்கிவிட்டது.அமெரிக்கக் கண்டத்தின் இரு பெரிய நாடுகளில் அவர்கள் பயணம் செய்யவும் சொத்துக்களை முதலீடு செய்யவும் தடை உருவாகியிருக்கிறது. அதுபோன்ற தடைகள் ஐரோப்பாவுக்கும் பரவக்கூடும். ராஜபக்சக்களுக்கு அமெரிக்காக் கண்டத்தில் மட்டும் தடையில்லை, உள்நாட்டிலும் அவர்களுக்கு கடந்த ஆண்டு பாதுகாப்பு இருக்கவில்லை. அதனால்தான் மூத்த ராஜபக்சக்கள் நாட்டின் படைத்தளங்களில் ஒளிந்தார்கள் அல்லது நாடு விட்டு நாடு ஓடிக்கொண்டிருந்தார்கள். சொந்த நாட்டிலேயே அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமற் போய்



விட்டது. அவர்கள் வென்று கொடுத்த நாட்டிலேயே அவர்களுக்கு நிம்மதியாக உறங்க முடியாமல் போய்விட்டது. ஏன் இந்த நிலை வந்தது? அப்படியென்றால் அவர்கள் பெற்ற வெற்றியின் பொருள் என்ன? யுத்தம் தான் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியது என்றால், யுத்தம் முடிந்த பின்னரும் ஏன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லை? நாடு ஏன் அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது?

ஏனென்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றமுடியவில்லை. அப்படி மாற்றவும்முடியாது. ஏனென்றால் நாட்டின் மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரை பூச்சி, புழுக்களைப் போல கொன்று குவித்துப் பெற்ற வெற்றி அது. ஓர் இனப்படுகொலையை அரசியல் தீர்வாக மாற்ற முடியாது.மாறாக இனப்படுகொலைக்கு எதிரான நீதிதான் அரசியல் தீர்வாக அமையமுடியும். அதைத்தான் தமிழர்கள் கேட்கிறார்கள். முழுமையான'13ஐ' அல்ல. ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடப் போவதாக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தினார்.ஆனால் சுதந்திரதின விழாவன்று அவரால் அப்படிப்பட்ட அறிவிப்பு எதனையும் வெளியிட முடியவில்லை.அவர் கொழும்பில் 200 மில்லியன் ரூபா செலவில் சுதந்திரதினத்தைக் கொண்டாடிய பொழுது, தமிழர் தாயகத்தில் சுதந்திரதினம் ஒரு கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி தமிழ் மாணவர்கள் ஊர்வலம் போனார்கள்.



தமிழ் மக்கள் சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஷ்டிப்பது இதுதான் முதல் தடவையல்ல. கடந்த பல தசாப்தங்களாக அவர்கள் அவ்வாறுதான் அனுஷ்டித்து வருகிறார்கள். 1957 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு கேட்டது.அந்த அழைப்பை ஏற்று திருமலையில் நடராஜன் என்றழைக்கப்படும் இளைஞர் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி கட்டப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்ட முற்பட்டார்.

அவரை திருகோணமலைச் சந்தையில் வியாபாரஞ் செய்த ஒரு சிங்களவர் வேட்டைத் துவக்கினால் சுட்டு வீழ்த்தினார். இன்றுவரையிலும் நடராசனுக்கு நீதி கிடைக்கவில்லை.தமிழ் மிதவாதிகளால் தூண்டிவிடப்பட்டு தமிழ் இளையோர் எத்துணை துணிகரமான செயல்களில் இறங்கமுடியும் என்பதற்கு நடராசன் முதலாவது முன்னுதாரணம். தமிழ் மக்களின் போராட்டத்தில் முதல்வித்து அவர். நடராசனுக்குப் பின் அவ்வாறு துணிச்சலாகத் தங்கள் உயிர்களை, உறுப்புகளை, சொத்துக்களை, கல்வியை, இழந்த தியாகிகளின் மிகநீண்ட பட்டியல் தமிழ்மக்களிடம் உண்டு. ஆனாலும் நடராசன் சுட்டு வீழ்த்தப்பட்டு 65ஆண்டுகளின் பின்னும்,தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. சுதந்திரதினம் கரிநாளாகவே காணப்படுகிறது. ஆனால் நடராசனை கறுப்புக்கொடி ஏந்துமாறு தூண்டிய தமிழ் மிதவாதிகளின் வழிவந்தவர்கள் பின்னாளில் தாங்களே சுதந்திரதின விழாவில் தேசியக் கொடியைக் கைகளில் ஏந்தி அசைத்தார்கள்.கொல்லப்பட்ட நடராசனை அதைவிடக் கேவலமாக அவமதிக்கமுடியாது.அவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சிக் காலகட்டத்தில், சுதந்திரதின விழாவில் பங்குபற்றிய தமிழ்த் தலைவர்கள், இப்பொழுது மட்டக்களப்பில் காந்தி பூங்காவில் காந்திக் குல்லாவும் கறுப்புக் கொடியுமாக நிற்கிறார்கள். அவர்கள் எதற்காக காந்திக் குல்லா அணிந்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அவர்களுடைய நடப்பு அரசியலை வைத்து பார்க்கும்போது, அவர்களுடைய தோற்றம் வினோதஉடைப் போட்டியில் வேசமிட்டு வந்தவர்களைப்போலக் காணப்பட்டது. அவர்கள் விதவிதமான வினோத உடைகளை அணிந்து தமிழ் மக்களைக் கவர முயற்சிக்கிறார்கள்.

ஒருபுறம் தமிழ் அரசியல்வாதிகள்,அரசியலை வினோத உடைப் போட்டியாக மாற்றுகிறார்கள்.இன்னொருபுறம் ஜனாதிபதி ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு தருவேன் என்கிறார்.கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பொலிஸ் அதிகாரம் தொடர்பில் இப்போதுள்ள நிலைமைகளில் மாற்றம் இல்லை என்று கூறுகிறார்.அதாவது '13 மைனஸ்'? அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு பொலிஸ் அதிகாரத்தைப் பெறும் சுதந்திரம் இல்லை.ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வைப் பெறும் சுதந்திரந்தான் உண்டு.ஆனால் அதைக் கூறியது யாரென்றால் சுதந்திரமில்லாத ஒரு நாட்டின் தலைவர்?

புவிசார் அரசியல் விளக்கங்களின்படியும்,பூகோள அரசியல் விளக்கங்களின்படியும் ஒரு பிராந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் ஒரு சிறியநாடு முழு அளவுக்குச் சுதந்திரமானதாக இருக்கமுடியாது.ஆனால் அந்தச்சிறிய நாடு வெளிச்சக்திகள் தலையிட முடியாதபடி உருகிப்பிணைந்த ஒரு நாடாக இருந்தால்,அது ஒப்பீட்டளவில் ஆகக்கூடிய பட்சம் சுதந்திரமாக இருக்கலாம்.

சிறிய நாடுகளைப் பொறுத்தவரை சுதந்திரத்தின் அளவு என்பது ஐக்கியத்தின் அளவுதான்; நல்லிணக்கத்தின் அளவுதான். அந்தநாட்டில் வாழும் எல்லா மக்கள் கூட்டங்களையும் அந்த நாட்டின் சகநிர்மாணிகளாக ஏற்றுக்கொண்டு பல்லினத்தன்மைமிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பினால், அது ஆகக்கூடியபட்சம் சுதந்திரமாக இருக்கலாம். இல்லையென்றால் தனக்குள் மோதிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை வெளிச்சக்திகள் வேட்டையாடும். அதுவும் இலங்கை போன்று மூன்று பேரரசுகளின் இழுவிசைகளுக்குள், கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு ஜல சந்தியில் காணப்படும் மிகச் சிறிய நாடானது, தனக்குள் அடிபடுமாக இருந்தால் அது பேரரசுகள் பங்கிடும் ஓர் அப்பமாக மாறிவிடும். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

இலங்கைத்தீவு இப்பொழுது ஒரு சுதந்திரமான நாடு அல்ல. இறைமையுள்ள நாடும் அல்ல.தமிழ் மக்கள் சுதந்திரமாக இல்லாதவரை சிங்கள மக்களும் சுதந்திரமாக இருக்கமுடியாது என்பதைத்தான் கடந்த 13ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன. போரில் வெற்றி பெற்ற பின்னரும் ஏன் இந்த நாடு சுதந்திரமாக இருக்கமுடியவில்லை?ஏன் இந்த நாடு செழிப்பாக நிமிர முடியவில்லை? தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்த பின்னரும் தமிழ் அரசியலை முன்வைத்து ஏன் ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் பதில் கூற வேண்டியிருக்கிறது? வடக்கில் கடலட்டை எப்படி ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறியது? ஆயுத மோதல்களில் வெற்றி பெற்ற பின்னரும் இந்த நாடு ஐ.எம்.எப். போன்ற அனைத்துலக நிறுவனங்களின் சொற்கேட்டு கீழ்ப்படியும் ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டது?

இலங்கை அதன் 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் ஒரு காலகட்டம் எனப்படுவது ஐ.எம்.எப்.போன்ற வெளித்தரப்புகளிடம் கடன்கேட்டுக் கையேந்தும் ஒரு காலமாகவே காணப்படுகிறது.

இவ்வாறு வெளிநாடுகளிடமும் உலகப்பொது நிறுவனங்களிடமும் கையேந்தும் ஒருநாடு தன்னைச் சுதந்திரமான நாடாக கூறிக் கொள்ள முடியுமா? கால் மார்க்ஸின் வார்த்தைகளிற் சொன்னால் "ஒடுக்கும் இனம் என்றைக்குமே நிம்மதியாக இருக்கமுடியாது". அது சுதந்திரமாகவும் இருக்கமுடியாது.ஒரே ஒரு விடயத்தில்தான் இப்போதைக்கு சுதந்திரமாக இருக்கலாம் . அது 'பிச்சையெடுப்பதற்கான சுதந்திரம்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பண்டா செல்வா ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட பின்னர் தலைவர்கள் மகிழ்ச்சியாக வெளியேறுகின்றனர்.

பேராசிரியர் சி.பத்மநாதன்

# சுதந்திரமான இலங்கையில் நாடாளுமன்றத்தின் கேடுகளினால் ஏற்பட்ட விளைவுகள்

2

பிரித்தானியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையை எழுதிய பின், அதனைக் கவசமாகக்கொண்டு டி.எஸ்.சேனாநாயக்கவின் அரசாங்கம் தமிழருக்குப் பாதகமான நடவடிக்கையை மேற்கொண்டது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் விளைவாக இந்திய வம்சாவளித் தமிழர் குடியுரிமையை இழந்தனர். டொனமூர் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட, ஒரு சமூகத்தின் உரிமைகளை அரசாங்கம் அகற்றிவிட்டது. நாட்டில் உருவாகியிருந்த 10,00,000 மக்கள் அடங்கிய சமூகத்தினர் நாடற்றவர் என்று வகைப்படுத்தப்பட்டனர். மூன்றாம் உலக நாடுகள் என்று எம்மவர் கரிசனையோடு சொல்லும் நாடுகளில் ஜவஹர்லால் நேருவைத் தவிர வேறெவரும் இந்த அநியாயங்களைக் கண்டுகொள்ளவில்லை. இவ்வாறான நிலையில் தந்தை செல்வநாயகம் ஒரு புதிய இயக்கத்தை உருவாக்கினார் என்று முன்னே குறிப்பிட்டோம்.

அரசாங்கத்தின் குடியுரிமைச் சட்டங்களினாலும் குடியேற்றத் திட்டங்களினாலும் அதிர்ச்சியுற்ற இலங்கைத் தமிழர்கள், சிங்களத் தலைவர்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கையினைக் கைவிட்டனர். அவர்கள் அரசியல் விழிப்படைவதற்கும் அவர்களிடையே தேசிய உணர்ச்சி உதயமாவதற்கும் நாடாளுமன்றத்தின் செயற்பாடே அடிப்படையான காரணமாகும். அத்தகைய சூழ்நிலையிலே செல்வநாயகம் சமஷ்டி பற்றிப் பேசிய பொழுது ஆர்வத்தோடும் ஆவலோடும் கேட்டனர். தாம் ஒரு தேசிய இனம் என்பதை உணர்ந்து கொண்டனர். தமிழ்த் தேசியம் என்பது உருப்பெற்று ஒரு பெரும் மக்கள் சக்தியாகிவிட்டது. அதனை அழிக்க முடியாது என்பதை அண்மையில் நடைபெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான ஊர்வலம் நினைவுபடுத்தியது. அது மக்கள் மயமானது; ஜனநாயக மரபுகள் சார்பானது. அஹிம்சை வழிகளின் புனருத்தாரணமானது.

1956 இல் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாகும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்ட காலம் முதலாகத் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இலங்கைத் தமிழர்கள் ஒன்றிணைந்து பல போராட்டங்களை நடத்தினார்கள். அவை தோல்வியில் முடிவடைந்து விட்டன என்ற தவறான கருத்தைச் சில ஊடகங்கள் சொல்லி வருகின்றன. உண்மையில் அந்தப் போராட்டங்களின் பயனாக மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்மானங்கள் ஏற்பட்டன. அவற்றைப் பற்றிய விபரங்கள் மேல்வரும் பக்கங்களிலே விளக்கப்படும். ஆனால் எவரும் எதிர்பாராத வண்ணமாக கைக்கெட்டியவை வாய்க்கெட்டவில்லை என்பதே இலங்கைத் தமிழரின் அண்மைக்கால வரலாறாகிவிட்டது.

இலங்கை அரசாங்கங்களினாலே சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. திருமதி பண்டாரநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் 1972 ஆம் ஆண்டில் உருவாக்கிய ஓரினமயமாக்க அடிப்படையிலான அரசியலமைப்பு பல மாற்றங்களினாலே சிதைவடைந்துள்ளது. இவை தொடர்ச்சியாகவும் ஒன்றிணைந்தும் நடத்திய போராட்டங்களின் விளைவாகும். இவற்றைப் பின்னோக்கிப் பார்க்கின்றபொழுது இன்றைய தலைமுறையினர் பெருமைப்பட வேண்டியனவாகும்; அவை நன்றியுணர்வோடு பார்க்கவேண்டியவை.

தந்தை செல்வநாயகம் 20 வருடகாலமாக தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீட்டுக் கொள்வதற்காக நடத்திய போராட்டங்கள் தொடர்ச்சியானவை; எழுதிய உடன்படிக்கைகள் பல; நடத்திய பேச்சுவார்த்தைகளும் பல அவை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் நிகழ்ந்தவை. நாடாளுமன்றத்திலும் அவரது கட்சி பலம் பொருந்திய அமைப்பாக விளங்கியதால் சில சமயங்களில் அரசாங்கத்தை அகற்றுவதற்கும், வேறு சில காலங்களிலும் அரசாங்கத்தை அமைப்பதற்கும் தென்னிலங்கையிலுள்ள தலைவர்கள் அவரது ஆதரவைப் பெற்றனர். அதை வழங்குவதால் சமூகத்துக்கு வேண்டிய சில நலன்களைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது. அவற்றைப் பற்றிய விபரங்களை இங்கு சொல்வதற்கு அவகாசமில்லை. அவர் அரசாங்கத்தோடு ஏற்படுத்திய உடன்படிக்கைகளில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் (1957) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்கள் மேல்வருவனவாகும்:

- இந்திய வம்சாவழியினரின் குடியுரிமை பற்றிய பிரச்சினை அவர்களின் தொழிற் சங்கங்களின் தலைவர்களோடு பேசித் தீர்க்கப்படும்.
- தமிழ் -தேசிய சிறுபான்மையினரின் மொழியாக ஒப்புக் கொள்ளப்படும். அது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகவும் ஆவணப் பதிவு மொழியாகவும் அமைவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.
- வடமாகாணத்தில் ஒரு பிராந்திய சபையும் கிழக்கு மாகாணத்தில் இரண்டு அல்லது அதற்கு மேலான பிராந்திய சபைகளும் அமைக்கப்படும். அவை பரஸ்பரமான விருப்பத்துக்கேற்ப இணைந்து கொள்ளலாம்.
- பிராந்தியங்களுக்கு மேல்வருவன அடங்கிய விடயங்களில் அதிகாரங்கள் வழங்கப்படும்: காணி, விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், கல்வி, சுகாதார சேவைகள், மருத்துவ சேவைகள், போக்குவரத்து, பண்பாட்டு அலுவல்கள்.

அது பிரதானமாக ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் தூண்டுதலாற் சக்திவாய்ந்த ஊடகங்களும் சங்கத்தாரிற் சிலரும் நடத்திய உணர்ச்சிபூர்வமான, உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களினாலே தென்னிலங்கையிற் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனாற் பீதியடைந்த பிரதமர் உடன்படிக்கையைக் கைவிட நேர்ந்தது. இருப்பினும் இரு விடயங்களைப் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். ஒன்று, உடன்படிக்கையில் அடங்கிய, தமிழ்மொழி தொடர்பான உடன்பாட்டை நிறைவேற்றும் வண்ணமாக பிரதமர் பண்டாரநாயக்க தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டத்தினை நிறைவேற்றினார். அதன் மூலம் தமிழ் மக்கள் கணிசமான அளவிலே மொழி உரிமையினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

இரண்டாவது விடயம், குடியேற்றம் பற்றியது. 20 நூற்றாண்டு முடியும் வரை 1956 க்குப் பின் பதவிபெற்ற அரசாங்கங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிற் குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக் கொண்டன. 1960 இலும் பின்பு 1965 இலும் அரசாங்கத்தை அமைப்பதற்காக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கையினை அடிப்படையாகக் கொண்டவை. அதிலுள்ள அம்சங்கள் 1987 இல் ஏற்பட்ட உடன்படிக்கையில் சற்று முன்னேற்றமான வகையில் இணைக்கப்பட்டன. இரு மாகாணங்களும் இணைந்த, சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநிலம் ஒன்று உருவாகுவதற்கு அந்த உடன்படிக்கை ஆதாரமாகியது. மாகாண சபையின் பலவீனங்களுக்கும் உடன்படிக்கைக்கும் இடையிலே தொடர்பில்லை. அவை அன்றைய அரசாங்கத்தின் சாதுரியமான கபடமான முயற்சிகளினால் ஏற்பட்டவை. அந்தப் பலவீனங்களை நீக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் எம்மவர்களின் செயற்பாடுகளினாலே பயனற்றுப் போய்விட்டன. அண்மைக் கால வரலாறுகளிலிருந்து படிக்க வேண்டிய பாடங்கள் பலவாகும். உண்மைகளை மறைக்கலாம்; அவற்றை நெடுங்காலம் மறைக்கலாம்; ஆனால் சதாகாலமும் எவராலும் மறைக்க முடியாது. அத்தகைய வலைக்குள் எமது சமுதாயம் அகப்பட்டுக்கொண்டது. அதனை அறுத்தெறிய வேண்டிய தேவை இப்பொழுது கட்டாயமாகிவிட்டது.

## சிங்கள மக்களின் ஜனநாயகப் புரட்சி

2022 இல் நடைபெற்ற புரட்சி இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகிவிட்டது. அது சிங்கள மக்கள் ஏற்படுத்திய புரட்சி; வரலாறுகாணாத புரட்சி. அது சர்வாதிகாரத்துக்கெதிரான புரட்சி; ஆட்சி நடத்துவதற்குத் தகைமையற்ற அரசாங்கத்துக்கு எதிரான புரட்சி; ஊழல் மோசடிகளுக்கு எதிரான புரட்சி. அது ஜனநாயக மரபுகளை மறுசீராக்கம் செய்வதற்கு நல்லாட்சியை ஏற்படுத்துவதற்குமான புரட்சி. நெடுங்காலமாக மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கும் சமூக நீதிமுறைக்கும் நாட்டின் பெருமைகளுக்குரிய வழமைகளுக்கும் மாறாகச் செயற்பட்ட நாடாளுமன்றம் கடந்த சில வருடங்களிலே தகைமையும் திறமையும் இல்லாத தலைமைகளின் வசமாகிவிட்டதால், முழு இலங்கையும் மீளமுடியாத ஒரு பொறிக்குள் அகப்பட்டுக்கொண்டது. உற்பத்திகள் பெருவீழ்ச்சி அடைந்தன; வருமானங்கள் வற்றிப் போய்விட்டன. அத்தியாவசியமான எரிபொருள், உணவுப் பொருட்கள், மருந்துகள், பாலர்களுக்கு வேண்டிய பால்மா முதலியவற்றை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. வெளிநாடுகளிலிருந்தும் பெற்ற கணிசமான அளவிலான கடன்களுக்குரிய வட்டிகளைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அரசாங்கமே வங்குரோத்து நிலையைப் பிரகடனப்படுத்தியது. சமுதாயமும் அரசும் இயங்கமுடியாத நிலை உருவாகிவிட்டது.

மீளமுடியாத ஒரு பயங்கரமான சூழ்நிலையிலே ரணில் விக்கிரமசிங்க விசித்திரமான முறையிற் பிரதமராகி, அதனை அடுத்து ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினாலே தெரிவு செய்யப்பட்டார்.

முன்னைய ஆட்சி முடிவடைந்தது. இப்போதைய ஜனாதிபதி அரசியல் அனுபவம் மிக்கவர்; பல தடவைகள் பிரதமராக இருந்தவர்; இந்நாட்டின் முன்னேற்றத்துக்குப் பல தலைமுறைகளாகப் பங்களிப்புச் செய்த ஒரு கௌரவமான குடும்பத்தின் வாரிசானவர். இலங்கை பல்லின மக்கள் வாழும் தேசம் என்பதை நன்குணர்ந்தவர். அவர் ஒரு பொழுதும் இனவாதம் பேசி அரசியல் நடத்தாதவர். அவர் அரசின் தலைவராக இருப்பதற்கு எல்லாத் தகைமைகளையும் கொண்டவர்.

இந்நாட்களில் ஏற்பட்டுள்ள மிகவும் பயங்கரமான நெருக்கடிகளில் இருந்தும் நாட்டை மீட்டுக்கொள்ளக்கூடிய தகைமையும் மனவுறுதியும் நாடாளுமன்றத்திலுள்ள வேறெவருக்கும் இல்லை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அவர் பதவி பெற்றபின் ஏதோவிதமாகச் சமுதாயமும் அரசும் இயங்கு நிலையில் உள்ளன. மீட்சி பெறலாம் என்ற நம்பிக்கை நாட்டு மக்களிடையே வலுப்பெற்று வருகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான அரசாங்கம் பரோபகார சிந்தனையில் கடன் உதவியாக வழங்கிய 4 பில்லியன் டொலர் வரை பெறுமதியான முதலினால் இலங்கை அழிவின் விளிம்பிலிருந்தும் தப்பிக் கொண்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் அழிவிலிருந்தும் காப்பாற்றுவதற்கு ஒரு பொருத்தமான அரசியல் கலாசாரமும் பொருளாதாரமும் இனங்களுக்கிடையான நல்லிணக்கமும் அவசியமான தேவைகளாகும்.

இது ஒரு மிகக் கடினமான காலம் நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய காலம். எல்லாச் சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டிய காலம் நாடாளுமன்றத்தில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டிய காலம். எல்லாச் சமூகத்தினரும் ஒன்று சேர்ந்து கடமை புரிய வேண்டிய காலம். அவ்வாறு செய்யாதவிடத்து கற்பனைக்கு எட்டாத விபரீதங்கள் ஏற்படும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அவலமான நிலையிலிருந்து விமோசனம் பெறுவதற்கு தேசிய இனங்களிடையிலான நல்லிணக்கம் அவசியமானது என்ற ஞானோதயம் தென்னிலங்கையிலுள்ள மிதவாதிகளிடையில் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியும் கண்ணியமான அரசியல்வாதிகள் பலரும் இதனைப் பற்றி வெளிப்படையாகப் பேசத் தொடங்கியுள்ளனர்.

இனப் பிரச்சினைக்கான தீர்வினை ஒரு கொள்கைப் பிரகடனமாக நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ள ஜனாதிபதி அது தொடர்பான சில உறுதியான நடவடிக்கைகளையும் வெளிப்படையாகவே மேற்கொண்டுள்ளார். இது முன்னைய ஜனாதிபதிகளோ பிரதமர்களோ செய்யாத விடயம். அவர் வேறெவரதும் வற்புறுத்தலின்றித் தானாகவே செய்கின்றார்; அதுவும் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அவர் இவற்றைச் செய்கின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



த.பிதுசன்
தரம்5
யா/ஆனைக்கோட்டை ,
றோ.க.த.க. பாடசாலை



லயா ஜீவசுதன்
தரம்-2
உடுவில் மகளிர்
கல்லூரி



A.ஜெஹானா
செனூரி
தரம்-2



சி.ஶ்ரீராம்
தரம் 7
யா/புனித பரியோவான்
கல்லூரி



ர.கிஷாந்தி,
தரம் 9
யா/உடுவில் மகளிர்
கல்லூரி.

# பிக்குமாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே முற்போக்கு, மிதவாதம், மனிதாபிமானம் அல்லது நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வைக் கோர வேண்டும், புலிகள் காலத்து அரசியல் சிந்தனையைக் கைவிட வேண்டும் என்று மார்தட்டுகின்ற ஈழத்தமிழ் ஆய்வாளர்கள் சிலரின் இயலாமை எழுத்துக்களினால், இலங்கை ஒற்றையாட்சி பலமடைவதையே கண்கூடாகக் காணமுடிகின்றது. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான கோரிக்கையை, தமிழ்த்தேசிய = தமிழர் வாழ்வியல் நாகரிகமாக அணுக வேண்டுமே தவிர, புலிகள் இயக்கம் பற்றிய தனிப்பட்ட வன்மங்களோடும், தத்தமது விருப்பங்களுக்கு ஏற்றவாறும் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை மடை மாற்றக்கூடாது.

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் நின்றும் இலங்கை நாடாளுமன்றத்தின் வழியாகவும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது என்பதன் அடிப்படையில் எழுந்ததே தமிழ்த்தேசியக் கோட்பாடு. அதற்குள் சாதிமத, பிரதேச வேறுபாடுகள் கூட இல்லை. இதனை மையப்படுத்தியே தமிழ்த்தேசியக் கோட்பாடு என்பதன் வரைவிலக்கணம் மேலும் விரிவடையும். அப்படி விரிவாக்கம் செய்யும்போது முற்போக்கு, மிதவாதம், நடைமுறைச் சாத்தியம், நல்லிணக்கம், மனித உரிமை மீறல் என்ற தமிழ்த்தேசியத்தை நீக்கம் செய்வதற்கான சொல்லாடல்களுக்கு இடமளிக்க முடியாது. ஆனால் தேசியம் பற்றிய இலக்கு மாறாத மாற்றுச் சிந்தனைகள், மாற்றுப் பாதைகளுக்கான விமர்சனங்கள் தாராளமாக முன்வைக்கப்பட வேண்டும். இந்த இடத்திலேதான் இந்தியா, தமிழ்த்தேசியக் கோட்பாட்டை நீக்கம் செய்யும் வேலைத்திட்டங்களில் அன்றில் இருந்து இன்று வரை ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடியும்.2009 க்குப் பின்னர் அதனை இந்தியா மிக இலகுவாகக் கையாளுகின்றது. குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கட்சிகள் மத்தியில் பிளவுகளை உருவாக்கி வருகின்றது.

"கொழும்புக்கும் வன்னிக்கும், செல்வதற்கு முன்னரும் சென்று வந்த பின்னரும் பேசிய விடயங்களைப் புதுடில்லிக்குச் சென்று ஒப்புவிப்பேன்" என்று சமாதானத் தூதுவராக இருந்த எரிக்சொல்ஹெய்ம் நேர்காணல் ஒன்றில் வெளிப்படையாகவே கூறியிருந்தார். ஆகவே சமாதானப் பேச்சுக்கூட புலிகளின் இராணுவ பலத்தினால் நோர்வேயின் அனுசரணையோடு ஆரம்பிக்கப்பட்டாலும், சர்வதேச அரங்கில் இருந்து புலிகளின் அரசியல் கோரிக்கையை முற்றாக நீக்கம் செய்யும் அரசியல் வேலைத் திட்டங்களை இந்தியா கனகச்சிதமாகச் செய்திருக்கின்றது என்பதையே சொல்ஹெய்மின் கூற்று பகிரங்கப்படுத்தியிருந்தது.


சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து 2009 போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான அரசியல் சூழலிலும், அமெரிக்க - இந்திய அரசுகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வடக்கு - கிழக்கில் குறிப்பாக தமிழ் இளைஞர்கள், தமிழ் ஊடகவியலாளர்களுடன் நடத்திய பல கலந்துரையாடல்களில் மாற்றுக் கருத்து, நல்லிணக்கம், மனித உரிமைப் பாதுகாப்பு, நடைமுறைச் சாத்தியமானதைச் சிந்தித்தல் என்ற போதனைகளையே அதிகமாக விதைத்தனர்.

தமிழ்த்தேசியக் கோபட்பாட்டை நீக்கம் செய்யும் நோக்குடனேயே இந்தச் சொல்லாடல்கள் இறக்குமதி செய்யப்பட்டு இன்று வரை போதிக்கப்பட்டும் வருகின்றன.

ஆனால் மாற்றுக்கருத்து என்பது பல்வேறு விடயங்களுக்கு உரியது. அதாவது ஒரு கருத்தில் அல்லது ஒரு கொள்கையில் இருந்து மாறுபட்ட, ஆனால் நோக்கத்தைக் குழப்பாமல் (Without Confusing the Objective) இருக்கக் கூடியதாக அமைவதே மாற்றுக் கருத்தாகும். உதாரணமாக இன விடுதலைப் போராட்டம் ஒன்றின் கொள்கைக்கு மேலும் உரமூட்ட அல்லது மேலும் சீர்திருத்தி திருப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாக மற்றுமொரு கருத்து எழுந்தால், அதனை மாற்றுக் கருத்து என்று அழைக்கலாம். அதாவது இன விடுதலைக்கான இலக்கைக் குழப்பாமல் அந்த இலக்கை அடைய வேறு பாதைகளை உருவாக்குவது (Creating Different Paths) என்றும் கூறலாம்.

ஆனால், இங்கே ஈழத்தமிழர் அரசியல் விடுதலை விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டம் தொடர்பாக எவருமே மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

தமிழின விடுதலைக்கு எதிரானவர்கள் இலங்கை அரசாங்கம் அல்லது சிங்களக் கட்சிகளின் பக்கம் நின்றும், வேறு சிலர் இந்திய அரசின் கதைகளைக் கேட்டும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தினார். அதாவது நியாயமான அரசியல் விடுதலைக் கோரிக்கைக்கு அரசியல் வஞ்சகம் (Political Traitors) செய்வோரை இப்போதும் இருக்கிறார்கள். ஆகவே இன விடுதலையைக் கொச்சைப்படுத்துவோரை மாற்றுக் கருத்தாளர்கள் என்று அழைக்க முடியாது. ஆனால் அவர்கள் தங்களை மாற்றுக் கருத்தாளர்கள் என்றும் மாற்று இலக்கியப் படைப்பாளிகள் - கவிஞர்கள் என்றும் தங்களைத் தாங்களே அழைப்பதற்கு அமெரிக்க = இந்திய அரசுகளே காரணம்.



பலஸ்தீனத்தில் யாசீர் அரபாத்தின் இயக்கத்துக்கு மாற்றாகக் ஹமாஸ் இயக்கம் போராடியதை மாற்றுக் கொள்கை என்று கூறலாம். அதாவது யாசீர் அரபாத்தின் சமாதானப் பேச்சுக்கான அணுகுமுறைகளை விமர்சித்துக் கொண்டு இஸ்ரேல் அரசோடு ஹமாஸ் இயக்கம் சேர்ந்து இயங்கவில்லை. இஸ்ரேல் அரசை ஹ்மாஸ் நியாயப்படுத்தவுமில்லை.

ஆனால் வடக்கு- கிழக்கில் மாற்று அரசியல் என்று சொல்லிக் கொண்டு, பலர் இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்குகின்றனர். 2009 க்கு முன்னரும் 2009 க்குப் பின்னரும் தமிழ்த்தேசிய அரசியலில் இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் மாற்றுக் கருத்துக்கள் என்று கூறி ஈழத்தமிழர்களிடம் வலிந்து திணிக்கப்பட்ட "நல்லிணக்கம்", "நடைமுறைச் சாத்தியமான சிந்தனை" என்ற நஞ்சுத்தனமான சொற்களை அமெரிக்க = இந்திய அரசுகளினால் சிங்கள மக்களிடம் திணிக்கவும் போதிக்கவும் முடியவில்லை என்பதைக்கூட அந்த நாடுகள் உணருவதாகத் தெரியவில்லை. ஆகவே சிங்கள மக்கள் பௌத்த தேசியத்தை மையப்படுத்திய இலங்கை ஒற்றையாட்சியைப் பாதுகாக்க கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருமித்த குரலில் செயற்படுகின்றனரோ, அதேபோன்று ஈழத்தமிழர்களும் இயங்க வேண்டிய காலம் இது என்பதை அமெரிக்க - இந்திய அரசுகளின் ஈழத்தமிழர் தொடர்பான அணுகுமுறைகளும் பௌத்த குருமாரின் போராட்டங்களும் நியாயப்படுத்தியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுமருத்துவநிபுணர் சிவன் சுதனின் தயாரிப்பில், கலாநிதி க.ரதிதரனின் இயக்கத்தில் அடுத்தவாரம் (பெப்ரவரி 18 ஆம் திகதி) தூவானம் திரைப்படம் வெளியாகவுள்ளது. இந்தநிலையில் **தூவானம்** திரைப்படம் குறித்தும், அதன் உருவாக்கம் குறித்தும் சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் பொது மருத்துவநிபுணர் சிவன் சுதன்.

○ நேர்கண்டவர்: ஔண்யன்




# எம் மண்ணின் முக்காலத்தையும் பேசும் சினிமா!

**கே: மருத்துவத்துறையில் நேரமேயில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபலமான மருத்துவநிபுணராக அறியப்பட்டவர் நீங்கள். அவ்வாறு மருத்துவத்துறையில் உள்ள கடும் வேலைப்பளுவுக்கு மத்தியிலும் உங்களிடம் பாடல்கள் உருவாக்கம், எழுத்து , வாசிப்பு , இப்போது திரைப்படம் என கலைகளின் மீதான ஈர்ப்பு எப்படி நிகழ்கின்றது?**

ப: கலை மீதான ஈடுபாடு எனக்கு சிறு வயதிலிருந்தே இருந்துவந்தது. அது எப்பொழுதும் எனக்கு மனநிறைவையும் ஆறுதலையும் கொடுத்து வருகிறது. பாடசாலை செல்லும் காலத்திலே எனது சிறுகதைகள் கல்லூரிச் சஞ்சிகைகளில் வெளிவந்தன. மருத்துவபீடத்திலே கற்கும் காலத்திலே பல நாடகங்களை மேடையேற்றினோம். எனது கவிதைகள், கதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகின. கவிதை, சிறுகதை, நாடகப் போட்டிகளில் பரிசுகளும் கிடைத்திருக்கின்றன. அந்த வெற்றியின் தொடர்ச்சியாகவே கலைத்துறையின் ஈர்ப்பும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**கே: மருத்துவர்கள் தங்களுக்கென்று தனியார் மருத்துவமனைகளை அமைத்தால், அதை எவ்வாறு இன்னும் விரிவாக்கி , அதிக நோயாளர்களையும், அதிக வருவாயையும் அடைவது என்பது பற்றியே சிந்திப்பார்கள் என்பதே எம்மிடையே உள்ள ஒரு பொதுக் கருத்து. மற்றைய மருத்துவர்களெல்லோரும் தங்கள் மருத்துவமனைகளில் 'ஒப்பிரேஷன்' தியேட்டரைக் கட்டுகையில், நீங்களோ ஒரு 'சினிமா' தியேட்டரையொத்த அரங்கை (மினி ஸ்ரூடியோ) அமைத்துள்ளீர்கள். எப்படி அந்த எண்ணம் ஏற்பட்டது?**

ப: ஒரு சமூகத்தின் ஆரோக்கிய மேம்பாடு சம்பந்தமாக முயற்சி எடுக்க வேண்டியதும் ஒரு மருத்துவனின் கடமையே. இதனைச் செய்வதற்கு பல வழிமுறைகளைக்கையாண்டு வருகிறோம். இதற்காகப் பத்திரிகைகள், சமூகவலைத்தளங்கள், மேடைகள், யூரிப் தளங்கள் போன்றவற்றையும் பயன்படுத்தி வருகிறோம். இதன் இன்னொரு பரிமாணமாக கலை வடிவங்களினூடாகவும் சமூக நல நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். அதற்கு நித்திலம் கலை அரங்கு(மினி ஸ்ரூடியோ) மிகவும் பயனுடையதாக அமைந்திருக்கிறது.

**கே: மருத்துவத்துறை சார்ந்த எழுத்து, காணொலிப் பாடல்கள் என்று இயங்கிக் கொண்டிருந்த உங்களை திரைப்படத்துறையில் இறங்கவைக்குமளவுக்கு தூண்டிய காரணி/காரணிகள் எவை?**

ப: கலாசாரப் பிறழ்வுகளுடன் பல திரைப்படங்கள் எம்மை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் வேளையிலே எம் மண் வாசனையுடன் எமது உண்மையான வாழ்வியலைப் பேசும் படங்கள் உருவாக வேண்டும் என்ற விருப்பம் எனக்கு நீண்டகாலமாக இருந்துவந்தது. அத்துடன் திரைப்படத்துறை பல விடயங்களை எடுத்துச் செல்வதற்கும், உணர வைப்பதற்கும் ஒரு சக்தி வாய்ந்த ஊடகம் என்றும் கருதுகிறேன். இதற்கு மேலதிகமாக பல மருத்துவத் தகவல்களையும் இதனூடாக வழங்க முடியும் என்றும் நம்புகிறேன்.

**கே: தூவானம் திரைப்படத்துக்கான முதல் துளி எப்படிக் கருக்கட்டியது? அதன் பின்னர் அது எப்படி முழுமையானது?**

ப: தூவானம் என்ற இந்தத் திரைப்படம் என்னுள் கருக்கொண்டு இறுதியில் திரைக்கு வர 5 வருடம் எடுத்திருக்கிறது. பல துயர வரலாறுகளைக் கடந்து வந்ததால் எமது சமூகம் ஒரு நம்பிக்கை இழந்த சமூகமாக , உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் நோய் வாய்ப்பட்ட சமூகமாக , தோல்வி மன நிலையில் உள்ள ஒரு சமூகமாக மாறியிருக்கிறது. இதனால் தற்கொலை முயற்சிகள், சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகள். குடும்ப வன்முறைகள் அதிகரிக்கும் ஏது நிலை காணப்படுகிறது.
மக்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் இதன் தாக்கங்களைக் குறைக்க முடியும் என்று ஒரு சிந்தனை எழுந்தது. அதன் விளைவே தூவானம்.

**கே: ஈழ சினிமாவென்பது தென்னிந்திய சினிமாவைப் போன்று பணம் கொழிக்கும் துறையல்ல.மாறாக இருக்கும் பணத்தையும் இல்லாமற் செய்துவிடும். அப்படியிருந்தும் எப்படி ஒரு தயாரிப்பாளராகத் துணிந்து களமிறங்கியுள்ளீர்கள்?**

ப: திரைப்படம் ஒன்றை எடுத்து முடிப்பதற்கு மிக அதிகளவு பணம் செலவாகும் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்தத் தூவானம் திரைப்படம் இலாப நோக்கத்துக்காகத் தயாரிக்கப்பட்டது அல்ல. இதனைத் திரையிடுவதன்மூலம் செலவிடப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாது என்பது எனக்குத் தெரியும். இருந்த பொழுதும் இது எனக்கு ஒரு ஆத்ம திருப்தியைத் தருகிறது. எனக்கு வழிகாட்டியாக, ஆசிரியராக, ஆலோசகராக இருந்து என்னை நெறிப்படுத்தி எனது தந்தைக்கு இந்தப்படத்தை சமர்ப்பணமாக்கி திரையிடுகிறேன்.

**கே: ஈழ சினிமாவில் இதுவரை வெளிவந்த திரைப்படங்களில் இருந்து 'தூவானம்' எந்தவகையில் தனித்துவமானது என எண்ணுகிறீர்கள்?**

ப: இந்தத் திரைப்படம் எம் மண்ணில் நடந்த உண்மைச் சம்பவங்களைப் பேசி நிற்கிறது. அத்துடன் முற்றுமுழுதாக ஈழத்துக் கலைஞர்களினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது எமக்கு என்ன நடந்தது? என்ன நடந்துகொண்டிருக்கிறது? என்ன நடக்கவேண்டும் ? என முக்காலத்தையும் பேசி நிற்கிறது. அத்துடன் தமிழர்களின் முதலாவது நரம்புவாத்தியக் கருவியாக இருந்து வழக்கொழிந்துபோன வாசிக்கக் கூடிய யாழ் வாத்தியம், நித்திலம் கலையகத்தால் உருவாக்கப்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். அந்த யாழும் இந்தத்திரைப்படத்தில் அறிமுகமாகிறது.

**கே: என்னதான் காசைக் கொட்டி, தரமான படத்தை எடுத்தாலும் இங்கு மக்கள் திரையரங்குகளுக்கு வருவதில்லை. ஆனால் அதை கடந்தவருடம் வெளியான 'புத்தி கெட்ட மனிதரெல்லாம்' திரைப்படம் பொய்யாக்கி, ஏராளமானோரை திரையரங்குகளுக்கு வரவழைத்து, இலாபத்தையும் சம்பாதித்தது. இதற்கு முக்கியமான காரணம் அந்தப் படக்குழுவினரின் விளம்பரப்படுத்தல்கள் தான். தூவானம் படத்துக்கும் அப்படி பார்வையாளர்களை அலைமோத வைக்க என்னென்ன உத்திகளைக் கையாளப்போகிறீர்கள்?**

ப: இந்தத்திரைப்படம் மக்களைச் சென்றடைய வேண்டும். குறிப்பாக இளம் தலைமுறையினரைச் சென்றடையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. இதற்குப் பல பெரியவர்களும், ஊடகத்துறையினரும் ,நண்பர்களும், திரைப்படக்குழுவினரும் பெரிதும் உறுதுணையாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டு முயற்சி வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

**கே: தூவானத்துக்கான இயக்குநர், நடிகர், நடிகையர் தெரிவை எப்படி மேற்கொண்டீர்கள்?**

ப: இதன் இயக்குநர் கலாநிதி ரதிதரன் இந்தத் துறையிலே ஆழ்ந்த அனுபவமும் திறமையும் உள்ளவர். அவரை நண்பர் நவராஜ் அவர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். கதையின் பாத்திரங்களுக்கு ஏற்றவகையிலே நடிகர், நடிகைகள் பல தளங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இதற்குக் கலாநிதி ரதிதரன் பெரும் பங்காற்றினார். இந்த தெரிவுகளில் எமது தயாரிப்பு நிர்வாகியாக இருந்த பாலசுந்தரமும் பெரிதும் உதவியாக இருந்தார்.

**கே: இந்தத் திரைப்படத்தில் தனியே தயாரிப்பாளராக மட்டுமன்றி அதன் கதை மற்றும் உருவாக்கத்திலும் உங்கள் பங்களிப்பு இருக்கின்றதா? அப்படியானால் எந்தவகையிலான பங்களிப்பு?**

ப: இந்தப் படத்தின் கதை திரைக்கதை வசனம்,பாடல்கள், தயாரிப்பு ஆகியவற்றை நான் செய்திருந்தேன் , அத்துடன் ஒரு பாத்திரத்தில் நடித்தும் இருக்கிறேன்.

**கே: தூவானம் திரைப்படத்தை உருவாக்கும் போது நீங்கள் சந்தித்த சவால்கள், தடைகள்? அவற்றை எப்படி எதிர்கொண்டீர்கள்?**

ப: முழு நீளத் திரைப்படம் என்ற வகையில் இது அனைவருக்குமே ஒரு புது அனுபவம். அத்துடன் இந்தக்காலப்பகுதியிலே தான் 'கொவிட்' பெருந்தொற்று ஏற்பட்டது. இதற்கு மேலதிகமாக 150 க்கும் அதிகமான முன்னணிக் கலைஞர்களை ஒருங்கிணைத்து படத்தைத் தயாரித்து முடித்தமை ஒரு சவாலான ,சுவையான அனுபவமாக இருந்தது. இந்தப் படத்தை மெருகேற்றி வடிவமைக்க படத்தொகுப்பாளர் பிரபு பெரிதும் உதவியாக இருந்தார். படக்குழுவினரின் பேரூக்கம் அனைத்துச் சவால்களையும் வெற்றிகொள்ள உறுதுணையாக இருந்தது.

**கே: தூவானத்துக்குப் பின் தொடர்ந்தும் புதிய திரைப்படங்களைத் தயாரிக்கும் எண்ணமுண்டா? அவ்வாறாயின் எப்படியான திரைப்படங்கள்?**

ப: நிச்சயமாக எமது தனித்துவம் குன்றாத மண்வாசனை உள்ள படங்களைத் தொடர்ந்தும் உருவாக்குவேன். இந்த முயற்சிகள் தொடர அனைவரது ஆதரவையும் எதிர்பார்த்து நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல் கடவுள்

○ இராகவன்




சிலர் ஓரிடத்தில் குழுமிநின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அந்த இடத்தில் மட்டும் மழை பொழியவில்லை. தோலை உருக்குமாப்போல் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. என்மீது படர்ந்திருந்த ஈரமெல்லாம் நொடிக்குள் ஆவியாகிவிட நான் அச்சொட்டாகக் குழுமியிருந்தவர்களுக்கு மத்தியில் இறங்கினேன். அவர்களில் நடுநாயகமாக நின்றிருந்த பாதிரியார்

" இதோ நான் சொன்னபடி அற்புதம் நிறைவேறிவிட்டது. நமது வானத்தூதர் வந்திறங்கி விட்டார். ஆண்டவருக்குக் கோடி ஸ்தோத்திரம்! நாங்கள் மன்றாடிக்கேட்டுக்கொண்டதற்கு செவிமடுத்து மீண்டுமொரு வானதூதரை அனுப்பி வைத்துள்ளீர்! வானமுள்ளவரை இந்த அற்புதம் நிலைத்திருக்கட்டும்" எனப் பாதிரியார் இரு கைகளை மேலுயுர்த்தியபடி சொன்னார். நான் குறுக்கிட்டு 'மன்னிக்கவும் நான் நீங்கள் கருதும் வானதூதனல்ல. ஒரு மிகச்சாதாரணமான ஒராள். எதிர்பாராத விதமாக இங்கே வந்து சேர்ந்துள்ளேன்.' என்றேன். பாதிரியார் மார்பில் சிலுவையிட்டுக் கொண்டே சிரம் தாழ்த்தி ' வானதூதர் என்றைக்காவது வெளிப்படையாக வாய் மலர்ந்து தம்மை வானதூதர் என அறிமுகம் செய்தததைக் கேட்டிருக்கிறீர்களா? அதுதான் இத்தருணம் நிறைவேறிற்று' என்று சொல்லலானார். 'இந்த மகிமை என்றென்றும் நிலைபெற்றிருப்பதாக! ஆண்டவருக்குத் தோத்திரம் !ஆண்டவருக்குத் தோத்திரம்! வானதூதர் என்றும் எம்முடன் இணைந்திருக்க மன்றாடுவோம்' என ஏனையோர் ஒருமித்துக்குரலெழுப்ப நான் பெருங்குழப்பத்துக்குள்ளனேன்.

'இப்போது நாமிவரை மகிமைப்படுத்திக் கொள்ளும் தருணம் நெருங்கிவருகிறது. அதற்காக ஆயத்தப்படுத்துங்கள். தூபமிடலுக்கும் தைலமிடலுக்கும் முதலில் ஏற்பாடு செய்யுங்கள். அவருக்கு பொருந்தி வரக்கூடி ய ஆவணத்தைத் தெரிவு செய்து கொண்டு வாருங்கள். தாகந்தணிக்க திராட்சை ரசத்தை பரிசுத்தமான கிண்ணத்தில் நிரப்பிக் கொண்டு வாருங்கள். தாமதிக்க வேண்டியதில்லை' எனப் பாதிரியார் கட்டளை பிறப்பிக்கலானார். நான் செய்வதறியாது குழம்பிப் போய் நின்றிருந்தேன். பாதிரியாரின் கட்டளைப்படி ஏற்பாடுகள் துரிதமாகின. முதலில் வைக்கோல் பொதிந்த ஆசனத்தில் என்னைக்கொண்டு வந்து இருத்தினர்.

'இதோ ஆசனம் மகிமை பெற்றது. இப்போதிருந்து இனித் தொடர்ந்து வரவிருக்கும் நாள்களில் எந்தவொரு ஆசனத்தைக் காட்டிலும் இதுவே மகிமைக்குரிய ஆசனமாக இருக்கும் என்பதை மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப்பாதிரியார் பிரசங்கிக்கலானார். நான் மனந்தளராமல் மீளவும் 'என்னை நீங்கள் எதிர்நோக்கியிருந்த வானதூதர் எனக்கருதிக்கொண்டிருக்கும் அன்புக்குரிய விசுவாசிகளே! நானிந்த ஆசனத்துக்குத் தகுதியானவனோ ,இவ்வாசனத்தை மகிமைப்படுத்தக்கூடியவனோ அல்ல என்பதைப் பொறுமையுடனும் நிதானமாகவும் கேட்டுக் கொண்டிருங்கள். நான் வானத்திலிருந்து இறங்கியது என்னவோ மெய்யானது தான். அது முன்னேற்பாடு ஏதுமில்லாமல் தற்செயலாக நிகழ்ந்திருக்குமொன்று தான். வானத்திலிருந்து இறங்கியதால் நான் வானதூதன் ஆகி விட மாட்டேன். நீங்கள் இந்தவிதமாகக் கருதுவதாயிருந்தால் மழையும் வெயிலையும் கூட வானதுதர்களாக ஏற்க வேண்டியதாகவிருக்கும் . நான் மிகச்சாதாரண மான ஒருவன் என்பதை மெய்யாகவே உங்களிடம் கூறி வைக்க விரும்புகிறேன்.' எனச்சொல்லலானேன். நான் இதைச்சொல்லி முடித்த பின்னரே இதைச்சொல்லாமலே இருந்திருக்கலாம் எனத்தோன்றியது. நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த பாதிரியார் உட்படக் குழுமியிருந்த யாவரும் முழந்தாளிட்டனர். 'வானதூதர் எவருமே இதுவரை தம்மை அறிமுகஞ் செய்தததும் இல்லை. விளம்பரப்ப டுத்திக்கொண்டதுமில்லை. அதைத்தான் நீங்களும் இப்போது வெளிப்படுத்திய வாக்குத் தத்தங்களால் நிறைவேற்றியி ருக்கிறீர்கள் . ஆசனத்தை மகிமைப்படுத்தும் படியாக வெளிப்படுத்திய வாக்குத் தத்தங்களை நேரடியாக செவிமடுக்கக் கிடைத்த வாய்ப்புக்காக ஆண்டவன் பேரால் தோத்திரம்!' எனப் பாதிரியார் திரும்பவும் அதே தடத்தில் வாக்குரைக்கலானார். நான் அங்கிருந்து வெளியேறும் வரைக்கும் எதுவும் பேசுவதில்லை எனத் தீர்மானிதத்தேன். அடுத்து நறுமணத் தூபமிட்டார்கள். அந்நறுமணம் எனக்கு இதுவரை பரிச்சயம் இல்லாததாகவும் நாசிக்கு வெகு இதமானதாகவுமிருந்தது. அதனைத் தொடர்ந்து பெண்ணொருத்தி வந்து என் கால்களை எடுத்து வைத்து தைலமிட்டாள். 'இந்த இடந்தான் அச்சுறுத்தல் ஏதுமின்றி நல்ல பாதுகாப்பான இடமாக இருக்கிறதே ?பின்னர் எதற்காக இங்கிருந்து வெளியேற வேண்டும் என எண்ணுகிறீர்கள்? ' என்றவள் கிசு கிசுப்பான குரலில் குனிந்த தலை நிமிராமல் என்னிடங் கேட்டாள். நான் ஒருகணம் திகைத்தேன். அவளது முகத்தை ஒரு தடவை பார்த்து விடத் தோன்றியது.

> நான் வானத்திலிருந்து இறங்கியது என்னவோ மெய்யானது தான். அது முன்னேற்பாடு ஏதுமில்லாமல் தற்செயலாக நிகழ்ந்திருக்குமொன்று தான். வானத்திலிருந்து இறங்கியதால் நான் வானதூதன் ஆகி விடமாட்டேன். நீங்கள் இந்தவிதமாகக் கருதுவதாயிருந்தால் மழையும் வெயிலையும் கூட வானதுதர்களாக ஏற்க வேண்டியதாகவிருக்கும் .

'நீங்கள் நியாயப்படியான ஒரேயொரு காரணத்தையேனும் முன்வைத்து விட்டால் இங்கிருந்து வெளியேறுவதற்கு என்னால் உதவ முடியும். நான் தைலமிட்டு முடிக்கும் வரை உங்களுக்குக் காரணத்தை முன்வைக்க அவகாசமிருக்கிறது' இப்போதும் தலை குனிந்தபடியே தான் கிசுகிசுத்தாள்.

'உன்னுடைய முகத்தை ஒரு தடவை முழுமையாக எனக்குக் காட்டினால் இங்கிருந்து வெளியேறுவதற்கான தகுந்த காரணத்தை என்னால் முன்வைக்க முடியும்' என்றேன். அதற்கவள்

'நீங்கள் நியாயப்படியான காரணமொன்றை முன்வைத்தால் மட்டுமே என்னுடைய முகத்தை முழுமையாகப் பார்க்கவியலுமேயொழிய மற்றும் படி நான் எனது முகத்தைக் காட்டினாலும், உங்களுக்குத் தெரியாது. இதை நீங்கள் நம்பாவிடின் இதோ என் முகத்தை பார்த்துக் கொள்ளுங்கள்' எனக் கூறி, என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவளது முகத்துக்குப் பதிலாக ஒரு வட்டக் கண்ணாடி தான் இருந்தது. அதில் என் முகம் தான் தெரிந்தது. அதை என்னால் பார்க்க முடியவில்லை. 'போதும் போதும் தலையைக் குனி 'என்றேன் பதற்றத்தோடு, ஆனால் அவள் அதனை நிறைவேற்றவில்லை. 'மன்னிக்கவும் நீங்கள் இங்கிருந்து வெளியேறியதற்கான தகுந்த காரணத்தை முன்வைக்காத வரைக்கும் நிமிர்ந்த தலை குனியாது என்பதை மன வருத்தத்துடன் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்' என்றாள்.


'என்னிடம் ஒரே ஒரு காரணம் தான் இருக்கிறது. நான் மிகச் சாதாரணமானவன். தற்செயலாக வானத்தில் இருந்து இறங்கி விட்டேன். மற்றும்படி நான் வான தூதனே அல்ல. வான தூதனாக இங்கிருப்பது குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. என்னால் வான தூதனாகப் பாவனை செய்ய முடியாது. அதனால் இங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டியுள்ளது' என்றேன்.

'இதெல்லாம் முறையான காரணம் அல்ல. ஒரு சாத்தானாகப் பாவனை செய்வது தான் கடினமானது. வான தூதனாக பாவனை செய்வது எளிதானது. வழமையாக இதைத் தானே எல்லாரும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு நீயும் நானும் என்ன விதிவிலக்கா? வேறு ஏதேனும் காரணம் சொல்லு' என்றவள் சொன்னதைக் கேட்டு எனக்கு கோபம் வந்தது. அவளை இருகால்களாலும் ஓங்கி உதைக்கத் தோன்றியது. 'உண்மையில் வேறு காரணம் எதுவும் முன் வைப்பதற்கு இருக்கவில்லை. நீ ஏற்றாலும் ஏற்காவிடிலும் இது தான் எனது நிலைப்பாடு முடியுமானால் வெளியேறிச் செல்ல உதவி செய். அல்லது வேறு ஏதாவது நிகழும் வரை மௌனமாக இருந்து காலத்தைக் கடத்தி விடுகின்றேன்' என்று சொன்னேன். அவள் எதுவும் சொல்லாமல் தைலம் இட்டு முடித்து எழுந்து போய் விட்டாள்.

அடுத்து நிகழ்ந்தது தான் நான் விரும்பி இருந்ததும் எதிர் பார்த்ததுமாகும். உண்மையில் இப்போது தான் அவர்கள் எதிர்பார்த்திருந்த வான தூதர் வந்திறங்கினார்.

(தொடரும்)

## காதலின் சாபம்



சொல்லாத அன்பால் சோகம்
கூடியது என்னுள்ளே
நில்லாத ஞாபகங்கள் நிலை
கொண்டது எனக்குள்ளே

மனமோ வாடியது அன்பை
அடைந்திட வழிதேடியது
நினைவுகள் கொள்வதினால்
நிமிடங்களும் சுமையாகியது

நிசப்த இரவில் எல்லாம்
நெஞ்சுருகி போகிறேன்
எட்டாத அன்பைக் கூட
எட்டித்தொட பார்க்கின்றேன்

என்னுள்ளே மிஞ்சுவது
எந்நாளும் சோகமே
இதுவே நான்பெற்ற
காதலின் சாபமே


ரா. துசேந்தன்
செல்வநகர், மன்னார்

## தாய்

தன்னையுருக்கி
தாய்மை பெருக்கி
உன்னை எனக்கை
உலகில் உயரவைத்து
மண்ணை சேக்க
உரமூட்டியவள் தாய்
கண்ணைப்போல ஒளிதந்து
கருணை தனை நிதமூட்டி
விண்ணைப்போல பரந்து
தியான மனம் படைத்து
உண்மை அன்பால்
அரவணைப்பவள் தாய்

வறுமை தெரியா வயதில்
பலதும் பத்தும் தந்து
பணம் சேர்த்து
பாடுபட்டுப் பாரில்
நாம் வளமாய் வாழ
வழிகாட்டுபவள் தாய்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**1916 பெப்ரவரி 17**
**இராமநாதனுக்கு வரவேற்பு**

(சென்ற வாரத்தொடர்ச்சி..)

சட்டசபையில் உரையாற்றியதுடன் நிற்காது கலவரம் பற்றி எடுத்துக் கூறுவதற்காக, இராமநாதன் கப்பலில் இலண்டன் சென்றார். (அப்போது இலங்கையில் இருந்து விமானப்பயணம் வசதி இல்லை) அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபடியால் ஆவணங்கள் எதையும் எடுத்துச்செல்ல ம்முடியாத நிலை காணப்பட்டது. இதனால் இராமநாதன் முக்கியமான விடயங்களை எழுதி தனது சப்பாத்தினுள் ஒளித்து வைத்து எடுத்துச்சென்றார். இலண்டனில் இராமநாதன் இலங்கையில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பக்கச்சார்பான நடவடிக்கைகளை "Martiol Law in Ceylon"என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டு பிரிட்டிஷ் எம்.பி.க்களுக்கு விநியோகித்ததுடன் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பக்கச்சார்பான நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். இதனையடுத்து இலங்கைக்கான பிரித்தானிய ஆளுநர் திருப்பி அழைக்கப்பட்டதுடன் அவசரகாலச்சட்டமும் நீக்கப்பட்டது.

இராமநாதன் திரும்பி வந்த போது, கொழும்பு துறைமுகத்தில் இருந்து இராமநாதனுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இராமநாதனின் முகத்தைத் தரிசிப்பதற்காக சிங்களவர்கள் கொழும்பை நோக்கிப் படையெடுத்தனர்.

இராமநாதனை வரவேற்பதற்காக வரவேற்புக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. இந்தக்குழு இராமநாதனை வரவேற்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவர்களனைவரும் வெள்ளை ஆடையும் ரோஜா சால்வையும் அணிந்திருந்தனர். காலை எட்டு மணிக்குத்தான் கப்பல் கரைக்கு வருவதாக இருந்தது. ஆனால் பொழுது புலர முன்னரே மக்கள் கூட்டம் திரண்டு விட்டது.நேரம் செல்லச் செல்ல மக்கள் கூட்டம் அலை மோதத்தொடங்கியது.

இராமநாதனை ஏற்றிச்செல்வதற்காக லில்லி, ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வெண் புரவிகள் பூட்டப்பட்ட ஊர்தியொன்று தயாராக இருந்தது. துறைமுகத்தினுள் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் துறைமுகத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற உத்தரவு பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்டி ருந்தது. ஏ.ஈ.குணசிங்க (பின்னாளில் பிரபல தொழிற்சங்கவாதி) ஈ.டபிள்யூ பெரேரா.ஏ.டபிள்யூ.பி ஜெயதிலக.பி.என். ஜெயந்தி, சேர் ஜோன் கொத்தலாவல ஆகியோருக்கு துறைமுகத்தினுள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வந்திருந்தவர்கள் தமது ஆதர்ஷபுருஷனின் முகத்தைத் தரிசித்தனர். கப்பல் துறைமுகத்தை அடைந்ததும் கரகோஷம் பல நூறு யார்களுக்கு கேட்டது. இலங்கைப்பிரதிநிதி நீடூழி வாழ்க, Young Lanka welcomes the grand old man of Ceylon போன்ற சுலோக அட்டைகள் இராமநாதனை வரவேற்றன. இராமநாதனைத் தரிசிப்பதற்காக ரிக்ஷாக்களிலும் பலர் வந்திருந்தனர். இளைஞர்கள் சிலர் வயதானவர்களை தோளில் சுமந்து வந்திருந்தனர். வீதியின் இருமருங்கும் மாணவர்கள் கொடிகளுடன் முன்னே செல்ல கலைஞர்கள் இராமநாதனின் குதிரை வண்டியின் முன்னால் நடனமா டிக்கொண்டும் பாடல்களை இசைத்தவாறும் சென்றனர். ஊர்வலம் புறப்பட ஆயத்தமானதும் ஏற்பாட்டுக்குழுவினர் முப்பது இளைஞர்கள் குதிரை வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அகற்றிவிட்டு தாங்களே வண்டியை இழுக்கத்தொடங்கினர். இது இராமநாதனுக்கு தாங்கள் செலுத்தும் நன்றிக்கடன் என அவர்கள் கூறினர். ஏ.ஈ.குணசிங்க ஈ.டபிள்யூ பெரேரா,ஏ. டபிள்யூ.பி ஜெயதிலக.பி.என்.ஜெயந்தி, சேர் ஜோன் கொத்தலாவல, டி.எஸ். சேனநாயக்கா ஆகியோரே அப்படி தேரின் வடம் பிடித்து இழுத்துச்சென்றனர். ஊர்வலம் 1/4 மைல் தூரம் சென்றதும் போக்குவரத்து 20 நிமிடங்கள் தடைப்பட்டது. அளவுக்கதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஊர்வலம் இராமநாதனின் இல்லத்தை அடைந்ததும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவு மக்கள் கூட்டம் இராமநாதனின் காணியை நிறைத்திருந்தது. வந்தவர்களனைவரும் இராமநாதனின் முகத்தை எப்படியும் ஒருமுறையாவது தரிசித்து விட வேண்டும் என்ற ஆவலுடன் காணப்பட்டனர். இராமநாதன் ஊர்தியை விட்டு இறங்கியதும் கண்டியிலிருந்தும் இரத்தினபுரியிலிருந்தும் வரவழைக்கப்பட்ட கலைஞர்கள் ஆடிப்பாடி இராமநாதனையும் வந்திருந்தவர்களையும் மகிழ்வித்தனர்.

சிறிது நேரத்தில் இராமநாதன் உரையாற்றத் தொடங்கினார். பத்திரிகையாளர்கள் இராமநாதனின் உரையைச் செவிமடுக்கவோ இராமநாதனை நெருங்கவோ முடியாத அளவுக்கு மக்களின் ஆரவாரம் காணப்பட்டது. வரவேற்புக் குழு உறுப்பினர்களில் ஒருவர் இராமநாதனின் உரையை சிங்களத்தில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்தார். மக்கள் இராமநாதனின் உரையை உன்னிப்பாக செவிமடுத்துக்கொண்டிருந்தனர். மாலையில் வாணவேடிக்கைகளும் இடம்பெற்றன.

இராமநாதனின் சேவையைப்பாராட்டி சிங்களவர்களின் தேசபிதா அநாகரிக தர்மபால எழுதியுள்ள கடிதத்தின் கடைசி வரிகள் இப்படி இருந்தன.

"நீங்கள் இலங்கையை விட்டு நீங்கும் நாள் அந்த நாள் தொடக்கம் இந்த ஏழைச்சிங்களவர்களைக் காப்பாற்ற எவருமேயில்லை".

(வரலாறு தொடரும்)



# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## ரணிலார் கூல்!



தனக்கு விசுவாசமான முக்கியமான மூன்று அமைச்சர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவசர மந்திராலோசனையொன்றை நடத்தியுள்ளாராம். நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையை ஆற்றுவதற்கு முன்னரே மேற்படி மூவரையும் அழைத்து கலந்துரையாடியுள்ளார் ரணிலார். இதன்போது சமகால அரசியல் உட்பட எதிர்கால நகர்வுகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

அவ்வேளையில், " சேர், உங்களின் அக்கிராசன உரையை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கவுள்ளது. சஜித் அணி பக்கம் இருந்து வருவதற்கு மூவர் தயார் நிலையில்தானே இருக்கின்றனர். அவர்களை இணைத்துக்கொண்டால் எதிரணியின் கொட்டம் அடங்கும். தெற்கு அரசியலில் மாற்றமும் வரும்." என அமைச்சரொருவர் குறிப்பிட்டுள்ளார். ஏனைய இருவரும் அதற்கு ஆமாம் போட்டுள்ளனர்.

" அரசியலில் பொறுமை அவசியம். அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. வரும்போது அவர்களை நிச்சயம் அழைப்பேன். அதுவரை எதிரணி ஆடட்டும். நாம் தக்க பதிலடியை கொடுப்போம்." என கூலாகச் சொன்னாராம் ரணிலார்.

## பதவியாசை இல்லை

" நான் பதவிகளுக்காக அரசியல் செய்பவன் கிடையாது. பதவிகள் நிரந்தரமும் இல்லை." என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளாராம்.

மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவதற்கு மொட்டு கட்சி எம்.பி.க்கள் சிலர் முயற்சித்து வருகின்றனர் என கடந்தவாரம் தகவல் வெளியானது. இது பற்றி தெற்கு அரசியலிலும் வெளிப்படையாகவே பேசப்பட்டது.

இந்நிலையில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பிரதமரை சந்தித்து இது பற்றி கேட்டுள்ளனர்.

" மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து விலகக்கூடாது என முதலில் வலியுறுத்தியவன் நான். அப்படிப்பட்ட எனக்கு பதவி ஆசை கிடையாது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லையெனில் பதவி வகித்து பயனும் இல்லை." எனவும் மேற்படி எம்.பி.க்களுக்கு பதிலளித்துள்ளார் பிரதமர் தினேஷ்.

## மீண்டும் குத்துக்கரணம்

ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவாரெனத் தெரியவருகின்றது.

அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருந்த வடிவேல் சுரேஷ், அதற்காக தருணம்வரும்வரை காத்திருந்தார். தற்போது 'என் தொப்புள்கொடி உறவுகளுக்காகவே இந்தத் தாவல்' என நியாயம் கற்பிப்பதற்கு அவருக்கு வாய்ப்பும் கிட்டியுள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை முன்னிட்டு, பதுளை மாவட்டம் பசறை லுணுகலையில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று வடிவேல் சுரேஸால் பெப்ரவரி 9 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பங்கேற்பார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மக்களும் காலை முதல் கூட்டம் நடைபெறும் இடத்தில் காத்திருந்தனர். எனினும், சஜித் வரமாட்டார் என திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது. திடீர் சுகயீனமே இதற்கு காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், வெளிமடை பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் சஜித் பங்கேற்றுள்ளார் எனவும், இதனால் ஏற்பட்ட அதிருப்தியால், ஐக்கிய மக்கள் சக்தியில் தான் வகிக்கும் பிரதி பொதுச்செயலாளர் மற்றும் பசறை தொகுதி அமைப்பாளர் ஆகிய பதவிகளையே வடிவேல் சுரேஷ் இராஜினாமா செய்துள்ளார். முதற்கட்டமாக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் வடிவேல், அதன்பின்னர் குத்துக்கரணம் அடிப்பாரென தெரியவருகின்றது.

## புறக்கணிப்புக்கு பின்னால்...!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த 8 ஆம் திகதி ஆற்றிய அக்கிராசன உரையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்தது.

அதேபோல , ஜனாதிபதி உரையாற்றத் தயாரானவேளை, சுதந்திர மக்கள் கூட்டணி சபைக்கு வந்து ரணிலுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியவாறு வெளிநடப்புச் செய்தது. இதற்காக எதிரணிகள் வகுத்த திட்டம் பற்றி தற்போது தகவல்கள் கசிந்துள்ளன.

எதிர்க்கட்சி தலைவர் சஜித், பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு அழைப்பொன்றை எடுத்துள்ளார்.

" நாங்கள் வரமாட்டோம், சபை அமர்வைப் புறக்கணிப்போம். விவாதத்திலும் பங்கேற்கமாட்டோம். உங்கள் தரப்பின் நிலைப்பாடு என்ன?" என்று சஜித் வினவியுள்ளார்.

இதுபற்றி ஆராய்ந்து கூறுவதாக சஜித்திடம் தெரிவித்த பீரிஸ், உடன் உதய கம்மன்பிலவுக்கு அழைப்பை எடுத்துள்ளார். " சேர், எமது கூட்டணியில் தேசிய சபை கூடுகின்றது அல்லவா...அதில் இவ்விடயம் பற்றி ஆராய்வோம்." என கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சுதந்திர மக்கள் சபையின் தேசிய சபை கூடியது. ஜனாதிபதியின் உரை சம்பந்தமாக ஆராயப்பட்டுள்ளது.


" ஜனாதிபதி சபைக்கு வரும் நாளில், அவர் பக்கம்தான் சபையில் உள்ள கமராக்கள் திரும்பி யிருக்கும். வெறுமனே வெளிநடப்பு செய்தால் அது காத்திரமான நடவடிக்கையாக அமையாது." என எம்.பி.யொருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

" ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையைப் புறக்கணிக்க முடியுமா, அது நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மீறும் வகையில் அமையாதா?" என மற்றுமொரு எம்.பி.யும் வினவியுள்ளார். இதற்கு வாசுதேவ நாணயக்கார பதிலளித்துள்ளார்.

" 1991 இல் பிரேமதாஸவின் உரையைப் புறக்கணித்து நாம் வெளிநடப்பு செய்தோம். அவ்வாறு செய்வது நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயல் அல்ல. வெறுமனே செல்லாது எதாவது கோஷத்தை எழுப்பியவாறு புறப்படு வோம்." என்றார் வாசு. " ஆம். இது சிறந்த யோசனை. அப்படியானால் 'ராஜாசன மேனியா'என்ற கோஷத்தை எழுப்பியவாறு வெளிநடப்பு செய்வோம்." எனக் குறிப்பிட்டு வாசுவின் கருத்தை ஆமோதித்தாராம் விமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி



121

அனுப்புபவர் பெயர்:.................................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

.........................................................................

கையொப்பம்:...........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. சமர்க்களத்தில் பிறந்த ஞானநூல் 6. வெடிப்பது
7. கோட்டான் 8. உள்ளே நெருக்கு 9. வரவேற்க வைப்பது
11. சினம் 13. இந்தியத் தேசிய விளையாட்டுக்களில் ஒன்று
15. சிவாஜியின் பட்டம் 17. இந்துசமய உட்பிரிவுகளில் ஒன்று
18. குரங்கு 22. இசைப்பாட்டு வகை 23. பேச்சு.

### மேலிருந்து கீழ்

1. பிரிவு 2. மறைந்திருந்து தாக்கும் கருவி 3. தழும்பு 4. இசைப்பாட்டு 5. தியாகம் 7. பிரமிட் வடிவம் 9. நடுக்கம் தரும் 10. சூரியன் 12. வேட்டுவத் தலைவன்
14. போதையில் வருவதை இப்படி வருவதாகக் கூறுவர் 15. மோச்சவழியை இப்படியும் கூறுவர். 16. திக்கு 19. அருச்சுனன் தேர்ந்தது இதில் 20. நனவல்ல 21. உணவு

### சொற்சிலம்பம் போட்டி 120 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அபிமன்யு 5. சாவி 7. கன்னி 8. கடுகதி 9. தவம் 11. நன்றி 12. பாம்பு 14. சரி 15. யோசனை 17. பன்மை 18. வாளி 19. தபசு 21.யமன் 23. திண் 24. தொல்லை 25.கவி.

**மேலிருந்து கீழ்**

1.அகதி 2. பின் 3. மனிதன் 4. யுகம் 5.சாகரம் 6. விதி 10.வறியோன் 11. சரி 12. பானை 13.புரளி 14. சந்ததி 16. சமையல் 17.பசு 19. வான் 20. பண் 22. மலை.

**05.02.2023 சஞ்சீவியில் வெளிவந்த 119 இற்கான விடைகள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தவறாக பிரசுரமாகிவிட்டன.**

### சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 119 க்கான சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சோபிதம் 4.அநாதி 7. கன்று 8. கூறுதல் 9. தகப்பன் 11. தலைப்பாகை 13. பகு 14. படு 15. அரி 16.கந்தல் 18.உறுதி 19: வாதம் 20. ஆதவன் 21. பிரியாவிடை

**மேலிருந்து கீழ்**

1. சோகம் 2. பின் 3. தறுநலை 4.அறுபகை 5. நாதன் 6. திய் 8.கூப்பாடு 10. கப்பல் 11. தகுந்த 12. அரிதின் 13. பகவான் 15. அறுவடை 17. தம்பி 18. உதவி 20.ஆயா

**சொற்சிலம்பம் போட்டி இல.120**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
17.02.2023 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.



# 'த பைசிக்கிள் தீவ்': ஒப்பாரும் மிக்காருமில்லை

○ கோகுலராகவன்

உலக வரலாற்றில் இத்தாலியத் திரைப்படங்களுக்கு ஒரு தரம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. யதார்த்த (realism) சினிமாவை கைவிட்டு புதிய அலைக்கான (neorealism) முயற்சிகளுக்கூடாக சினிமாவை நோக்கிப் பயணத்தை தொடங்கியமை இத்தாலியத் திரைப்படங்களின் உலக தரத்துக்கான காரணமாகின்றது.

இதில் பெரிய பங்களிப்பு ஆற்றிய இயக்குநராக விற்றோரியா டி சிகா(Vittoria de sica) கருதப்படுகிறார்.

அவரது 'த பைசிக்கிள் தீவ்' (The bicycle thief) முக்கியமான திரைக்காவியங்களில் ஒன்று.

ஒரு சைக்கிளை மையமாக வைத்து திரைக்கதை நகர்கிறது. 1948 இல் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் இத்தாலியில் நிகழும் வேலையில்லாத் திண்டாட்டம் படத்தில் காண்பிக்கப்படுகிறது. யுத்தத்தின் பின்னரான அவலம் நிரம்பிய மக்கள் வாழ்க்கை படத்தில் வருகின்றது. முசோலினி கொடுத்த பரிசு எனவும் சொல்லிக்கொள்ளலாம்.

நாயகனுக்கு வேலை ஒன்று கிடைக்கிறது. அந்த வேலைக்கு சைக்கிள் ஒன்று அவசியம். அதிகாரி சைக்கிளுடன் வரச் சொல்லி விடுகிறார். மனைவி வீட்டிலிருந்த பொருட்களை (bed sheets) விற்று சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுக்கிறாள். நாயகன் மகிழ்ச்சியாக வேலைக்குப் போகின்றான். சைக்கிளைக் கவனமாக பாதுகாக்கின்றான். வேலைத் தளத்துக்குள் தூக்கி கொண்டே போகின்றான்.

"இறக்கி வையப்பா"

என்று யாரோ சொல்கிறார்கள்.

எவ்வளவு கவனமாக இருந்தும் ஒருநாள் சைக்கிள் களவு போய் விடுகின்றது.

நாயகனும் அவனது பத்து வயது மகனுமாக சைக்கிளைத் தேடத் தொடங்குகிறார்கள். இதில் தகப்பனுக்கும் மகனுக்குமான உறவு இயல்பாக வெளிப்படுத்தப்படுகின்றது. மகனுக்கு உணவு வாங்கி கொடுக்கப்படும் இடத்தில் மகன் பணக்காரப் பையனுடன் போட்டிக்கு சாப்பிடும் இடம் நல்ல காட்சி அமைப்பு.

திரைப்படம் இயல்பை மீறியதாக இருக்கும்போது தன் அழகியலை இழந்து விடுகின்றது. இதனால்தான் தமிழ்சினிமா உலகத் தரத்துக்கு

போக முடியால் நிற்கின்றது. சைக்கிள் கிடைத்த பாடில்லை. சைக்கிள் திருடன் இவர்களை அடையாளம் கண்டு விலகி ஒளிந்து கொள்கிறான்.

இடையில் சைக்கிள் திருடன் ஒரு வயதானவரை சந்திப்பதை பின்னால் இருந்து காண்கிறார்கள்.

அந்த வயோதிபரைப் பிடித்து திருடனைக் கண்டு பிடிக்க முயல வயதானவர் மாயாஜாலம் பண்ணி தப்பித்து விடுவார். திருடன் வயதானவரின் மகனாகக் கூட இருக்கலாம். இடையில் ஒரு பெண்ணிடம் அருள்வாக்கு கேட்டுப் பார்க்கிறார்கள் . நம்மூர் வாக்குகாரர்கள் போலத்தான் "முயற்சி செய்தால் கிடைக்கும்" என்கிறாள் வாக்குக்காரி.

பிறகென்ன.? பின்னர் சந்தேகத்தில் ஒரு அப்பிராணியை பிடித்து மிரட்டுகிறார்கள். அவனோ தலை சுற்றி மயக்கம் போட்டு விடு கிறான்.....

உண்மையான திருடன் இதைப் பார்த்து யன்னலைச் சாத்திக் கொள்கிறான்.

இது எல்லாம் வேலைக்கு ஆகாது என்ற நிலையில் நாயகன் சைக்கிள் ஒன்றைத் திருட நினைக்கிறான்.

சரியான திட்டமிடல் இன்றி திருடினால்




மாட்டிக்கொள்ள வேண்டும்.

அதுவே நிகழ்கிறது. மகனின் முன்னால் தந்தை தண்டிக்கப்படும் நிலை மகாதுயரம். தனது தந்தையை விட்டு விடும்படி கெஞ்சுகின்ற மகன் துயரமே நிரம்பி நிற்கும் காட்சி பார்வையாளனை அழவே வைக்கும். எதுவுமற்றவர்களாக தகப்பனும் மகனும் நடந்து போவதுடன் கதை முடிவடை கின்றது.

நாயகன் நலிவுற்ற பொருளாதார நிலையை காட்டும் வகையில் ஒடுங்கிய முகத்தோடு இருப்பது (நாயக பிம்பத்தை தாண்டி இருக்கும் வகையாக இருப்பதே) புதிய அலை சினிமாவுக்கான போக்கு.

இலட்சணமான .அம்சமான நாயகனைத் தேடி அலையாத சினிமாவுக்கான இயக்கமே நல்ல சினிமாவைத் தரும். சிறிய கதைதான் காட்சிகளின் தொகுப்பின் இயல்பான போக்கு .இத்தாலியத் தெருக்கள், மூட நம்பிக்கைகள், மகனின் நடிப்பு, தந்தையின் பதற்றம் என்பன படத்தை உச்ச நிலைக்கு கொண்டு செல்கின்றன. எல்லாவற்றையும் சாடும் துணிச்சல் மிகுந்த இயக்கம் முக்கியமானது.

'த பைசிக்கிள் தீவ்ஸ்' பல விருதுகளை வென்ற சினிமா

இதன் தாக்கத்தால் இதே சாயலில் பல சினிமாக்கள் உருவாக்கப்பட்டன. தமிழில் வெளிவந்த தனுஷ் நடித்த 'பொல்லாதவன்' படமும் இதன் பாதிப்பில் உருவானதே.

ஆனால் மூலப்படத்தை விஞ்சுமளவுக்கு எவையும் உருவாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org